சாதிப் படுகொலைகள்: தலித் தலைமையின் தடுமாற்றம்

15 ஏப்ரல் '96 □ ரூ. 3.50

# புதிய ஜனநாயகம்




ஓட்டுப
பொறுக்கிகளின்
அரசிய
சூதாட்ட

www.padippakam.com

# திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிராக

திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிரான இயக்கத்தை மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தி வருகின்றன. தற்போது இரண்டாவது சுற்றுப் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களைத் தமிழகமெங்கும் நடத்தி வருகின்றன.

**சீர்காழியில்** 4.3.96 அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் ஜெயகாந்த் சிங், கார்த்திக் ஆகியோரின் சிறப்புரையும் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது. ஏறத்தாழ 300-க்கும் மேற்பட்டோர் திரண்டு வந்து ஆதரவளித்தனர்.

**மயிலாடுதுறை** வட்டம் மணல் மேட்டில் நடந்த பொதுக் கூட்டத்தில், கள்ளக் கடத்தல், கட்டைப் பஞ்சாயத்து கொலைகாரர்களுமான சிதம்பரம் சிரீதர் வாண்டையார், பிரேம்குமார் வாண்டையார்களின் அட்டூழியத்தை எதிர்த்தும், குடவாசல் அ.தி.மு.க. குண்டன் ராசேந்திரனின் அயோக்கியத்தனங்களை அம்பலப்படுத்தியும் தோழர். அம்பிகாபதி சிறப்புரையாற்றினார். சுமார் 500 பேர் திரண்டு வந்து பொதுக்கூட்டம் மற்றும் புரட்சிகர கலை நிகழ்ச்சிக்கு ஆதரவளித்தனர்.

**தருமபுரி** மற்றும் கிருஷ்ணகிரியில் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு போலீசார் கடைசி நேரத்தில் அனுமதி மறுத்தனர். காரணம், பாசிச ஜெயாவின் பிறந்த நாளில் அவரை விமர்சித்துப் பேசக்கூடாதென்பதுதான்! இருப்பினும், விவசாயிகள் விடுதலை முன்னணியினர் தருமபுரியை ஒட்டிய கிராமங்களில் தெருமுனைப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். ஜெயாவின் போலீசு அராஜகம், திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளின் கொட்டம் ஆகியவற்றை அம்பலப்படுத்திப் பிரச்சாரமும் கலை நிகழ்ச்சியும் கிராமங்களில் நடத்தப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் ஏறத்தாழ 100 பேர் திரண்டு வந்து ஆதரவளித்து, இப்பிரச்சாரத்தை வரவேற்றனர்.

**நெய்வேலி** திடீர்க் குப்பத்தில் 20.2.96 அன்றும், 21.2.96 அன்று மூலக்குப்பத்திலும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. இதற்கு முன்பு திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு சுவரெழுத்துப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. பிழைப்புவாதியும் அரசியல் தரகனுமாகிய பண்ருட்டி ராமச்சந்திரனை அம்பலப்படுத்தி சுவரெழுத்துகள் எழுதப்பட்டுள்ளதைக் கண்டு ஆத்திரமடைந்த அவரது உறவினரும் சாந்திராம் திரையரங்க உரிமையாளருமான சோமுவின் அடியாட்கள் சுவரெழுத்துகளை அழித்துவிட்டு, "நேரடியாக மோதிப்பார்!" என்று சவால் விட்டு ஆபாசமாக எழுதி வைத்தனர். இதற்குப் பதிலடியாகத் தொழிலாளர் பிரச்சாரக் குழுவினர் சுவரொட்டி பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இதனால் மேலும் ஆத்திரமடைந்த அக்கும்பல் 50 அடியாட்களுடன் வந்து தோழர்களைத் தாக்குவதற்குத் தேடுவது போல் மக்களைப் பீதியூட்டியது. மறுநாள், "பண்ருட்டியானின் எடுபிடி நாய் சோமுவே, உன் மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம்!" என்று மீண்டும் தோழர்கள் சுவரொட்டி பிரச்சாரம் செய்தனர். பின்னர் 17.2.96 அன்று தொ.பி.குழு தோழர் பகத்சிங் தனியே வரும்போது அவரைப் பிடித்து இக்கும்பல் தாக்க முயற்சித்தது. இதைக் கண்டித்து அன்று மாலையே சுவரொட்டி இயக்கத்தை தோழர்கள் மேற்கொண்டனர்.

பொதுக்கூட்டங்களில், இக்கும்பலின் ரவுடித்தனத்தை அம்பலப்படுத்தி, குறிப்பிட்ட தேதிக்குள் இக்கும்பல் பகிரங்க மன்னிப்புக் கேட்காவிட்டால் எமது போராட்டம் மேலும் தீவிரமாகும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது.



இதுதவிர, தொ.பி.குழுவினர் சு ரெழுத்து எழுதிக் கொண்டிருந்த போ அ.தி.மு.க. உட்கிளை வட்டச் செயலா ரும் ரவுடியுமான பெரியசாமி தனது அ யாட்களை ஏவித் தாக்க முற்பட்டால் தோழர்கள் உரிய முறையில் பதில கொடுத்ததும், ஆத்திரமடைந்த பெரி சாமி போலீசிடம் சொல்லி, தோழர்க மீது பொய் வழக்குகளைச் சோடித்து ளான்.

திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடி ளுக்கு எதிரான இயக்கத்தைக் கண்டு இந்த ஓட்டுப் பொறுக்கி கும்பல்க அரண்டு போயிருப்பதையே இவை நிரூபித்துக் காட்டுகின்றன.

**மானாமதுரையில்** 3.3.96 என்று தோழர் சுணேசன் தலைமையில், தோழர் ஜெயகாந்த் சிங் சிறப்புரையாற்ற எழுச்சிமிகு பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றன. எந்தவொரு ஒட்டுக்கட்சிக்கும் இல்லாத அளவுக்கு ஏறத்தாழ 1000 பேர் வரை திரண்டு ஆதரவு தெரிவித்து, நிதியுதவியும் செய்தனர்.

**கரூரில்**, கடந்த மூன்று வருட காலமாக புரட்சிகர அமைப்புகளின் பொதுக்கூட்டங்களுக்கு உள்ளூர் போலீசார் அனுமதி மறுத்துவந்த நிலையில், உயர்நீதி மன்றத்தில், "ரிட்" மனு தாக்கல் செய்து அனுமதி பெறப்பட்டது. ஆனாலும் ஜெயா கும்பலுக்குப் பல்லக்கு தூக்கும் போலீசார், பொதுக்கூட்டம் நடத்த அனுமதிக்காமல் திமிர்த்தனமாக நடந்து கொண்டனர். பின்னர் மாவட்ட போலீசு கண்காணிப்பாளரிடம் முறையிட்டு, அவரது தலையீட்டிற்குப் பிறகே அனுமதி கிடைத்தது.

கரூர் நகரத்தில் 16.3.96 அன்று தோழர் தவமணி தலைமையில், ம.க.இ.க. தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றிய பொதுக்கூட்டத்திற்கு ஏறத்தாழ 1200 பேர் திரண்டு வந்து ஆதரித்தனர். திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளை அம்பலப்படுத்தும் "அண்ணன் வர்றாரு..." கலை நிகழ்ச்சி எழுச்சி மிகு வரவேற்பைப் பெற்றது.

18.3.96 அன்று வெங்கமேடு எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் தோழர் தவமணி தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ம.க.இ.க. மாநிலச் செயற்குழு உறுப்பினரான தோழர் தமிழ்மணி. மற்றும் பு.மா.இ.மு. தோழர் பழனிச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச்சிக்கு உள்ளூர் மக்கள் 500 பேர் திரண்டு வந்தனர்.

இக்கூட்டங்களில் முன்னாள் எம்.எல்.ஏ.வும், இந்நாள் ஆர்.எம். வீரப்பன் கட்சிப் பிரமுகரும், கள்ளச் சாராய கிரிமினல் பேர்வழியுமான கு. வடிவேலை அம்பலப்படுத்திப் பேசியதும், அவனது அடியாட்கள் பு.மா.இ.மு. தோழர்களது வீடுகளுக்கு வந்து விசாரித்து விட்டுச் சென்றுள்ளனர்.





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 11

**இதழ்: 9-10**

15 மார்ச் '96 - 15 ஏப். '96

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.


## எரியும் கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்லது!

தமிழ்நாடு சட்டமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் நடைபெறும் பொதுத் தேர்தல்களுக்கான வேட்பாளர்களை நிறுத்துவதிலும், கூட்டணிகள் சேர்வதிலும் நேரிட்ட கடைசிநேரக் குழப்பங்கள், ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் அனைத்தினதும் தலைவர்கள் - பிரமுகர்களின் சுயரூபத்தை அம்பலப்படுத்திவிட்டன. எந்தவொரு கட்சியின் தலைவர் களும் பிரமுகர்களும் எந்தவொரு கொள்கை - இலட்சியத்துக்காகவும் அந்தக் கட்சியில் உறுப்பினர்களாகவோ, வேட்பாளர்களாகவோ இடம் பெறுவதில்லை. அதேபோல எந்த வொரு கூட்டணியும் பொதுவான கொள்கை, திட்டம், இலட்சிய அடிப்படையில் உருவா வதில்லை. சந்தர்ப்பவாத, பிழைப்புவாத சுயநலன்களை முன்னிறுத்தி நாற்காலிகளைப் பகிர்ந்து கொள்வதும், கள்ளப்பணம் கைமாறுவதும்தான் கூட்டணிகள் உருவாவதற்கும், வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கும் அடிப்படை என்பது வெட்ட வெளிச்சமாகிவிட் டது.

பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பலுடன் கூடிக் குலாவுவதற்கே அனைத்திந்தியக் கட்சிகளின் தலைவர்கள் விரும்பி, விலை போன போதும் அவற்றின் மாநிலத் தலைமை கள் அதை ஏற்கவில்லை. மாநாட்டுத் தீர்மானங்களும், தேர்தல் அறிக்கைகளும் பல்வேறு அரசியல், பொருளாதாரக் கொள்கைகள், திட்டங்களை அறிவித்த போதும் பாரதீய ஜனதா கட்சி தவிர பிற அனைத்திந்தியக் கட்சிகளின் மாநிலத் தலைமையும் சரி, தமிழ்நாட் டிலேயே உள்ள மாநிலக் கட்சிகளின் தலைமையும் சரி ஜெயா - சசி கும்பலைப் பதவியிலி ருந்து விரட்டுவது என்ற ஓரே இலட்சியத்துடனும் முனைப்புடனும் செயல்பட்டு வந்தன.

ஆட்சிக்கு வந்த நாளிலிருந்தே ஜெயா - சசி குடும்பத்தினர் மட்டும் பல ஆயிரம் கோடி ரூபாய் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் மூலம் கொள்ளையிட்டு, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஏராளமான முதலீடுகள் செய்தும், சொத்துக்களை வாங்கியும் குவித்தது. ஆடம்பர - உல்லாச - ஊதாரி வாழ்க்கை, கோயாபல்சு பாணி பூதாகர விளம்பரங்கள், குடமுழுக்கு - யாகங்கள் என அரசுச் சொத்தை வாரி இறைத்தது. கிரிமினல் குற்றக் கும்பல்களின் கூடாரமாகவே கட்சியைக் கட்டி எழுப்பியது. பெட்டி பெட்டியாக பணத்தை அள்ளிக் கொண்டு வந்து ஜெயா - சசி காலடியில் கொட்டுவதும், அவர்கள் பாதந்தாங்குவதுமே மந்திரிமார்களின் முதன்மைக் கடமையானது. மந்திரிகள் தம் பங்குக்கு சத்துணவு, இலவச பள்ளிச் சீருடை, இலவச வேட்டி - சேலை, சுடுகாட்டுக் கொட்டகை முதற்கொண்டு சகல வழிகளிலும் கொள்ளையிட்டனர். சட்டசபைக்குள்ளும் வெளியேயும் அரசியல் எதிரிகள் கிரிமினல் ரௌடிகளால் தாக்கப்பட்டனர்.

இதற்கெல்லாம் துணை நின்ற அதிகாரிகளுக்குக் கூட்டுக் கொள்ளையிட அனும தித்து பதவி நீட்டிப்பும் தரப்பட்டன. போலீசு நிலையங்களை கொலை, கொள்ளை, கற்பழிப்பு நிலையங்களாக மாற்றிய போலீசுத் துறைக்கு வரைமுறையற்ற சலுகைகளும் விருதுகளும் வழங்கப்பட்டன. மேற்படி குற்றங்களுக்காக கைதாகும் பிரமுகர்கள் அரசு விருந்தாளிகளாகவும், தியாகிகளாகவும் போற்றப்பட்டனர். இத்தனையும் செய்துவிட்டு அதிகாரிகள், அரசியல்வாதிகள், நீதிபதிகள் என்று பலரையும் விலைக்கு வாங்கினர்; ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலை, அரிசி - அன்னதானம், கட்சிப் பேரணிகளுக்கு கூலியும் பிரியாணியும் போட்டு ஆதரவு திரட்டினர்.

ஜெயா - சசி கும்பலின் அக்கிரமங்கள், அட்டூழியங்களை, அராஜக - ஆதிக்கத்தை இனி மேலும் நாடும் மக்களும் தாள முடியாது என்ற நிலையில் அதனிடம் விலை போன சில கைக்கூலிகள் தவிர மாநிலத்தில் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் அதற்கு எதிராக நின்றன. அதே சமயம் ஜெயா - சசி கும்பலைப் பதவியில் இருந்து தூக்கி எறிவதற்குப் பொதுப் பிரச்சாரம், கண்டன அறிக்கைகள், சட்டவாத நடவடிக்கைகள் என்பதோடு முடங்கிவிட்டன. வெறும் பிரச்சாரத்துக்கே ஆபாச - வன்முறை தாக்குதல் தொடுத்த ஜெயா - சசி ரௌடி கும்பலை எதிர் கொள்ளத் திராணியற்ற நிலையில் மக்களைத் திரட்டிப் போராட அவை துணியவில்லை. ஜெயா - சசி கும்பலை விரட்டுவதைவிட, அதன் ஆதாயத்தை அறுவடை செய்து கொள்வதிலேயே எதிர்க்கட்சிகள் அக்கறை காட்டின. எனவேதான் அவை ஓரணியில் நிற்க முடியவில்லை.

திமுகவில் எழுந்த வாரிசுச் சண்டையால் வெளியேறிய மதிமுகவோடு கூடுதல் நாற்காலியைக் குறி வைத்தே சி.பி.எம். கட்சி கூட்டுச் சேர்ந்து தனி அணி அமைத்தது. ஜெயா - சசியின் பணப் பெட்டி பரிசளிப்பில் குறி வைத்து தேசிய முன்னணி கூடிக் குலாவியதால் அதிலிருந்து திமுக வெளியேறியது. அடுத்து வரும் ஆட்சியில் பங்கு கேட்ட வாழப்பாடி கட்சியும், சாதி பலத்துக்கேற்ப தொகுதிகள் கேட்ட ராமதாசு கட்சியும் திமுக அணியிலிருந்து ஒதுக்கப்பட்டன. இப்படிப் பேரங்கள் கை கூடாத கட்சிகளை சேர்த்துக் கொண்டு உருவானதுதான் மூன்றாவது அணி. அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட நிலைக்கு திமுக தள்ளப்பட்டது. காங்கிரசுடன் கூட்டுச் சேரும் நப்பாசைக்கு பலியான கருணாநிதி ஏழு கட்சி கூட்டணியை சிதறடித்துவிட்டார். திமுகவுடன் கூட்டணி வாய்ப்பைப் பரிசீலிப்பதாக ஆட்டம் காட்டிய நரசிம்மராவ், அரசியல் தந்திரத்தில் கரு ணாநிதியை வீழ்த்தி விட்டார். இதன் மூலம் காங்கிரசும் பிளவுபட்டு தலைகுனிவைத் தேடிக் கொண்டது.

தொடர்ச்சி 23-ம் பக்கம்

www.padippakam.com

# ஓட்டுப் பொறுக்கிகளின் அரசியல் சூதாட்டம்

பதினோறாவது நாடாளுமன்றத்துக்கும், கூடவே தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், அசாம், அரியானா மற்றும் பாண்டிச்சேரி ஆகிய ஆறு சட்டப் பேரவைகளுக்கும் தேர்தல் திருவிழா களைகட்டிவிட்டது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கும் இந்த நாட்டை ஆளும் அதிகாரத்தின் அரசியல் தலைமையை எந்தக் கூட்டணியிடம், எந்தக் கட்சியிடம் அல்லது எப்படிப்பட்ட நபர்களிடம் ஒப்படைப்பது? இதைத் தீர்மானிக்கத்தான் இந்தத் தேர்தல்கள்.

ஆனால் முன்னெப்போதும் கண்டிராத அளவுக்கு அரசியல் கட்சிகள் அனைத்துமே பலவீனமான நிலையில் உள்ளன. ஓட்டு வாங்கவும் நாட்டையாளவும் தாங்களே தகுதியானவர்கள், யோக்கியதை கொண்டவர்கள் என்ற தார்மீக உரிமையுடனும் நம்பிக்கையுடனும் மக்களை அணுகும் துணிவு எந்தவொரு அரசியல் கட்சியிடமும் இல்லை. இலஞ்ச - ஊழல், அதிகாரமுறைகேடு, அராஜக வன்முறை - கிரிமினல் குற்றக் கும்பல்களின் தொடர்பு போன்ற சமூக விரோத நடவடிக்கைகளின் கரைபடியாத அரசியல்கட்சிகளோ, கூட்டணிகளோ கிடையாது.

பெரியதும் சிறியதுமாக நூற்றுக்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தில் நிற்கின்றன. இருந்தபோதும் அவை பெரும்பாலும் மூன்று அணிகளாக அணி வகுத்து நிற்கின்றன. முதலாவதாக பாசிச சகுனி நரசிம்மராவ் தலைமையிலான ஆளும் காங்கிரசுக் கட்சி நாடு தழுவிய அளவில் இல்லாவிட்டாலும், மாநில அளவில் உள்ள சில கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்துள்ளது. இரண்டாவதாக, இந்து பாசிசக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி சிவசேனாவுடன் மராட்டியத்திலும், சந்திரசேகர் - ஜார்ஜ் பெர்னாண்டஸ் தலைமையிலான சமாஜ்வாதி ஜனதாக் கட்சியுடன் வட மாநிலங்களிலும் கூட்டுச் சேர்ந்துள்ளது. லல்லுப் பிரசாத் யாதவ் தலைமையிலான ஜனதா தளத்தைக் கருவாகக் கொண்டு, ஒரு சில மாநிலக் கட்சிகளுடன் சேர்ந்து தொளதொளப்பாக அமைக்கப்பட்டு உள்ள தேசிய முன்னணியும் அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளும் அமைந்துள்ளது மூன்றாவது அணி.

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பெறாத சிறுபான்மை கட்சியைப் பெரும்பான்மையாக்கி, ஐந்தாண்டு கால ஆட்சி நடத்தியது; புதிய பொருளாதாரக் கொள்கையை, தாராளமயமாக்கலை வெற்றிகரமாக அமலாக்கியது ஆகியவை தமது சாதனை என்று நரசிம்மராவ் கும்பல் பீற்றிக் கொள்கிறது. இந்த இரு சாதனைகளைக் காட்டி, நாட்டுக்கு அரசியல் உறுதிப்பாட்டையும், செழிப்பையும் தன்னால்தான் தர முடியும் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. ஆனால் இவற்றை அக்கும்பல் எப்படிச் சாதித்தது என்பது மிக மிக முக்கியமானது.

ஜனதா தளம், தெலுங்கு தேசம், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா, சிவசேனா, சமாஜ்வாதி ஜனதா கட்சி ஆகிய கட்சிகளைச் சதிகள் - சூழ்ச்சிகள் மூலம் பிளவுபடுத்தியது. அஜித் சிங், ராம்லக்கன் யாதவ் போன்ற பதவி வெறியர்களுக்கு மந்திரி பதவி கொடுத்தது. அதேபோல சோனியாவை ஆதரித்த ஆர்.கே.தவான், அலுவாலியா, சதீஷ் சர்மா, மட்டான் சிங் போன்ற ராஜீவ் விசுவாசிகளுக்கு மந்திரி பதவி என்ற எலும்புத் துண்டை வீசியது. சரத் பவார் ஆதரவாளர்களாக இருந்த சால்வே, கல்மாதி மற்றும் அர்ஜுன் சிங் 'ஆதரவாளர்களாக இருந்த கமல்நாத், திக் விஜய் சிங் போன்றவர்களையும் இப்படியே வளைத்துப் போட்டார். தனிப்பட்ட செல்வாக்கை வைத்துக் கொண்டு ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த கருணாகரன், ஜெகன்னாத் மிஸ்ரா, அந்துலே, பூடாசிங் ஆகியோருக்கும் அதிகாரமில்லாத மந்திரி பதவி கொடுத்தார். இவற்றின் மூலம் நரசிம்மராவ், பதவிக்குப் போட்டியாளர்கள் எனக் கருதப்பட்ட சோனியா, சரத்பவாரை அரசியலில் முடக்கி வைத்தார்; அர்ஜுன் சிங், திவாரியைத் தனிமைப்படுத்தி, கட்சியிலிருந்து தூக்கியெறிந்தார்.

இதெல்லாம் தனது அரசியல் சாணக்கியம் என்று நரசிம்மராவ் கும்பல் பீற்றிக் கொண்டாலும், அதன் பின்பலமாக இருந்து இயங்குவது, சந்திராசாமி, சுப்பிரமணியசாமி, சதுர்வேதி, ஜயந்த் மல்கோத்ரா, லலித் சூரி மற்றும் பிற இரகசிய உலகப் பேர்வழிகளும் (ஒட்டோவிய குட்டோராச்சி) சர்வதேசக் கிரிமினல் குற்றக் கும்பல் பிரமுகர்களும்தாம். நரசிம்மராவ் பதவியேற்றதில் இருந்து, இவர்கள் அனைவரும் வரைமுறையற்ற அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு பல ஆயிரம் கோடி ரூபாய் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டனர். சர்க்கரை இறக்குமதி, இரயில் என்ஜின் இறக்குமதி, பங்கு - பத்திர ஊழல், என்ரான் உட்பட மின்திட்ட ஊழல், தொலைத் தொடர்பு ஒப்பந்த ஊழல், வீட்டு வசதி ஊழல் கடைசியாக ஹவாலா - இலஞ்ச மோசடி ஆகிய அனைத்துமே சாதனை அளவை முறியடித்தன.

இந்திரா - ராஜீவ் ஆட்சியைப் போல, ஒருபுறம் இலஞ்ச ஊழலை மூடி மறைக்க முயன்றாலும், மறுபுறம் சந்திரசேகர் ஆட்சியைப் போல இலஞ்ச - ஊழல் என்பது ஒரு பொருட்டாகக் கருத வேண்டிய கிரிமினல் குற்றமல்ல, சொல்லப்போனால் அவசியமான, தவிர்க்க முடியாத அரசியல் செயல்பாடுகள் என்ற நிலைமையை நரசிம்மராவ் கும்பல் உருவாக்கியது. இலஞ்ச - ஊழல், அதிகாரமுறைகேடுகள் பற்றிப் புகார் வரும்போதெல்லாம் கல்லூளிமங்கனைப் போல மவுனம் சாதிப்பது, சி.பி.ஐ.யைக் கேடாகப் பயன்படுத்திக் கொள்வது, எதிர்க்கட்சிகளின் பலவீனம் ஆகியவற்றைக் கொண்டு மிக எளிதாகச் சமாளித்தது.

ஆனால் எதிர்வரும் தேர்தலைக் குறிவைத்து, "திருவாளர் பரிசுத்த"மாகத் தன்னைக் காட்டிக் கொள்வதற்காக ஐந்தாண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த "ஜெயின் டயரி - ஹவாலா இலஞ்ச ஊழல் மோசடி" வழக்கைக் கையில் எடுத்துள்ளது, நரசிம்மராவ் கும்பல். இதுவரை தனக்கு விசுவாசமாக இருந்தவர்களையும் பலிகடாவாக்கி, கட்சிக்குள்ளும், வெளியிலும் உள்ள அரசியல் எதிரிகளை முறியடிப்பதற்கு இந்த வழக்கையும், சி.பி.ஐ. மற்றும் உச்சநீதி மன்றத்தையும் பயன்படுத்துகிறது. எப்போதும் இலஞ்ச ஊழல் சாக்கடையில் மூழ்கித் திளைக்கும் பன்றிகள், பன்னீர் தெளித்துக் கொண்டு வந்து சுத்தம் சுயமானவை என்று நடிக்கின்றன. தேர்தல் ஆதாயத்துக்காக நரசிம்மராவ் கும்பல் கையிலெடுத்த ஹவாலா விவகாரம்கூட அக்கும்பலையே அம்பலப்படுத்திவிட்டது. ஹவாலா ஜெயின் சகோதரர்களிடம் இருந்து அந்த வழக்கை மூடி மறைப்பதற்காக நரசிம்மராவ் கும்பலே மூன்றரைக் கோடி ரூபாய் லஞ்சம் வாங்கியது; அந்தப் பணம், தனது அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்காக ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவை பிளவுபடுத்தி நான்கு எம்.பி.க்களை விலைக்கு வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது என்பதும் அம்பலமாகியுள்ளது.

ஹவாலா வழக்கைத் தொடர்ந்து இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்றங்களுக்கு எதிராகப் பொது நல மனுக்கள் மூலம் நீதி மன்றங்களில் வழக்குத் தொடுப்பது என்கிற பூதம் கிளம்பி, நர



படிப்பகம்

www.padippakam.com

சிம்மராவ் கும்பலை மிரட்டிக் கொண்டிருக்கிறது. அயோத்தி பாபரி மசூதி இடிப்புக்கும், அதைத் தொடர்ந்து வந்த மதவெறிப் படுகொலைகளுக்கும் இந்து மத வெறி பாசிச பாரதீய ஜனதா கும்பலுடன் கள்ளக் கூட்டு வைத்திருந்தது, நரசிம்மராவ் கும்பல். மறுபுறம் இசுலாமிய சிறுபான்மை என்கிற பெயரில் குண்டு வெடிப்புகள் போன்ற பயங்கரவாத எதிர்த்தாக்குதல்கள் நடத்திய தாவூத் இப்ராகீம் தலைமையிலான சர்வதேச கிரிமினல் குற்றக் கும்பலுடனும் இரகசிய உறவு வைத்திருந்தது, நரசிம்மராவ் கும்பல். நரசிம்மராவுக்கு நெருக்கமான தில்லுமுல்லு சாமியாரான சந்திராசாமி வழக்கில் சிக்கிய அவரைக் காப்பாற்ற ராவ் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மூலம் அது அம்பலமானது.

இப்படிப்பட்ட கிரிமினல் கும்பல் தான் நாட்டைச் செல்வச் செழிப்பாக்கப் போவதாகவும் கூறுகிறது. இந்தக் கும்பலின் நிதியமைச்சராக உள்ள மன்மோகன் சிங், வர்த்தக அமைச்சராக உள்ள சிதம்பரம், வெளியுறவு அமைச்சராக உள்ள பிரணாப் முகர்ஜி ஆகிய அனைவருமே ஏகாதிபத்திய தாசர்கள்; பன்னாட்டு தொழிற்கழகங்களின் தரகர்கள்; உலக வங்கி, ஐ.எம்.எஃப்., உலக வர்த்தக நிறுவனம் ஆகிய ஏகாதிபத்திய நிதி மற்றும் வர்த்தக அமைப்புகளின் எடுபிடிகள்; இன்னாட்டு தரகு முதலாளிகளின் பிரதிநிதிகள். இந்தியப் பொருளாதாரத்தை உலகமயமாக்குவது, தாராளமயமாக்குவது, தனியார்மயமாக்குவது என்கிற கொள்கையால், அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கு மறு அடகு வைத்துவிட்டார்கள்.



சர்வகட்சிப் புரவலர் - பிரபல ஹவாலா நாயகன் ஜெயின்

அந்நியக் கம்பெனிகளுடன் இரகசிய பேரங்கள் நடத்தி, இலஞ்ச - ஊழல் செய்து கள்ள ஒப்பந்தங்கள் போடுகின்றனர்; காலாவதியான தொழில்நுட்பங்களையும் துருப்பிடித்த இயந்திரங்களையும், நாசகர ஆலைகளையும் இறக்குமதி செய்கின்றனர். ஏராளமாக அந்நியக் கடன்களை வாங்கிக் கொண்டு அவர்கள் விதிக்கும் நிபந்தனைகள் நிர்பந்தங்களை ஏற்றுக் கையொப்பமிடுகின்றனர். தனியார்மயக்கல் என்கிற பெயரில் பொதுத் துறைத் தொழில்களை மலிவான விலைக்கு ஏகபோகத் தரகு முதலாளிகளுக்கும், அந்நியக் கம்பெனிகளுக்கும் விற்றுக் கொள்ளையடிக்கின்றனர். முதலீடுகளை ஊக்குவிப்பது என்கிற பெயரில் ஏராளமான மோசடி நிதி மற்றும் பங்குக் கம்பெனிகளைத் துவக்கி, பொது மக்களையும் அரசு வங்கிகளையும் சூறையாட அனுமதிக்கின்றனர்.

இந்தக் கொள்கைகளால் மக்கள் நலத் திட்டங்கள் கைவிடப்படுகின்றன; வேலை இழப்பும் வேலை வாய்ப்பின்மையும், விலைவாசி ஏற்றமும் பெருகுகிறது. ஆனால் புதிய கொள்கைகளின் பலன்கள் மக்களைச் சென்றடையச் சற்று தாமதமாகும் என்று ஒருபுறம் சமாதானம் கூறிக் கொண்டே தேர்தல் ஆதாயம் கருதிப் பல இலவசத் திட்டங்களை நரசிம்மராவ் கும்பல் அறிவித்துள்ளது. மொத்தத்தில் நமது மக்களின் வாழ்க்கையைப் பாழடித்து, நமது நாட்டுப் பொருளாதாரத்தை திவாலாக்கி, ஏகாதிபத்தியங்களுக்கு மறுகாலனியாக்குவதுதான் நரசிம்மராவ் கும்பலின் பொருளாதாரக் கொள்கையாக உள்ளது.

இந்தச் சமூக விரோத பாசிச கும்பல் இவ்வளவு காலமும் ஆட்சியில் நீடித்து, ஓட்டுக்காக மீண்டும் மக்களை அணுக முடிகிறதென்றால், அதற்கு முக்கிய காரணம் மற்ற இரண்டு அரசியல் அணிகளின் கையாலாகத்தனம். நரசிம்மராவ் கும்பலைப் பதவியிலிருந்து துரத்துவதற்கான வாய்ப்புகள் பல இருந்தும், எதிர்க்கட்சிகள் எல்லாமே அடுத்த தேர்தலைச் சந்திப்பதற்கான துணிவும், மாற்று ஆட்சி அமைப்பதற்கான பலமும் இல்லாதவை. எதிர்க்கட்சி எம்.பி.க்களில் பலரும் பணத்துக்கு விலைபோகக் கூடியவர்கள்.

இந்துமத பாசிச ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா பரிவாரங்கள் கடந்த பல பத்தாண்டுகளாக உருவாக்கி வைத்திருந்த ஒரு மாயத் தோற்றம் - கொள்கையில் உறுதியும், நேர்மையும், தியாகமும், ஒழுங்கும், கட்டுப்பாடும் மிக்க இலஞ்ச - ஊழலால் கறைபடியாத, சுயநலனோ, குழு நலனோ இல்லாத அணிகளையும் தலைமையையும் கொண்டது என்கிற பொய்த் தோற்றம் - கடந்த சில ஆண்டுகளில் கலைந்து போனது. சில ஆண்டுகளுக்கு முன்பே சாதித் தகராறு காரணமாக பீகார் பாரதீய ஜனதா பிளவுபட்டு ஒரு பிரிவு எம்.எல்.ஏ.க்கள் ஜனதா தளத்துக்குத் தாவினர். மத்தியப் பிரதேசத்தில் நடந்த சாதித் தகராறு மற்றும் பதவிச் சண்டையின் காரணமாக கட்சிக்குள் "கோஷ்டி" மோதல்கள் வெடித்தன. இவை சட்டமன்றத் தேர்தலில் தோற்று, ஆட்சியை இழக்கவும் காரணமாகின. குஜராத்தில் நடந்த பதவிச் சண்டை ஆட்சிக் கவிழ்ப்பு அளவுக்குப் போய் கடைசி நேரத்தில் ஒரு தற்காலிகச் சமரசம் ஏற்பட்டுள்ளது. டில்லியிலும் இதே நிலைமைதான்.

மையத் தலைமை அத்வானி மற்றும் முரளி மனோகர் ஜோஷி தலைமையில் இரு குழுக்களாகப் பிளவுபட்டுள்ளது. இந்து பாசிச பரிவாரங்களுக்குள்ளேயே ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத், பஜ்ரங் தளம், சிவசேனா ஆகியவற்றுக்கிடையே குடுமிப் பிடிச் சண்டை தொடர்கின்றது. ஒன்றின் மீது மற்றொன்று ஆதிக்கம் வகிக்க முயலுகின்றன.

என்ரான் மின் திட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்து, மீண்டும் மறு ஒப்பந்தம் போட்ட போதும், ஜெயின் ஹவாலா - இலஞ்ச ஊழலில் அத்வானி, குரானா, பட்வா, வி.கே. மல்கோத்ரா, கைலாச ஜோசி ஆகிய தலைவர்கள் சிக்கிய போதும், பாரதீய ஜனதாவின் கரைபடியாத கரங்கள் என்ற பொய்த் தோற்றமும் இலஞ்ச ஊழல் எதிர்ப்பு சவடால்களும் சந்தி சிரிக்கத் தொடங்கிவிட்டன. தாவூத் இப்ராகீமின் சர்வதேச கிரிமினல் குற்றக் கும்பலுடன் பாரதீய ஜனதா எம்.பி. உட்பட அதன் முக்கிய பிரமுகர்களும் கூட்டு வைத்திருப்பது அம்பலமான போது, அக்கட்சியின் "இசுலாமிய எதிர்ப்பு இந்துத்துவ" வாளின் முனை மழுங்கிப் போனது.

"ராம ராஜ்யம்", இந்துத்துவம், இலஞ்ச - ஊழல் எதிர்ப்பு, சுதேசி இயக்கம், காங்கிரசுக்கு உறுதியான மாற்றுக் கட்சி ஆகிய முழக்கங்கள் எதுவுமே எடுபடாத நிலையில், எல்லா மாநிலங்களிலும் கோஷ்டிச் சண்டைகள் வெடித்து நாறும் நிலையில், ஹவாலா இலஞ்ச ஊழ



படிப்பகம்

www.padippakam.com

வில் அதன் தலைவர்கள் சிக்கிக் கொண்டுள்ள நிலையில் வாலறுந்த அனுமானாக வலம் வருகிறது, பாரதீய ஜனதா தலைமையிலான கூட்டணி.

காங்கிரசு மற்றும் பாரதீய ஜனதா ஆகிய இரண்டு பாசிசக் கூட்டணிகளுக்கும் மாற்றாக மூன்றாவது அணியாகத் தன்னை முன்னிறுத்திக் கொண்டுள்ளது, தேசிய முன்னணி - இடதுசாரிக் கூட்டணி. ஆனால் அதன் முக்கிய உறுப்பான ஜனதா தளமோ, தேசிய முன்னணி 1989-இல் நிறுவப்பட்டபோது இருந்த நிலையில் இன்று இல்லை; சந்திரசேகர் - தேவிலால் தலைமையில் ஒரு அணியாகவும், ஜார்ஜ் பெர்னாண்டஸ் - நித்திஷ் குமார் தலைமையில் ஒரு அணியாகவும், அஜித் சிங் - ராம்லக்கன் யாதவ் தலைமையில் ஒரு அணியாகவும், முலயம் சிங் யாதவ் தலைமையில் ஒரு அணியாகவும் உடைந்து சிதறிவிட்டது. எஞ்சியுள்ள ஜனதா தளம் பீகார், கர்நாடகா, ஒரிசா மாநிலங்களில் உள்ளூர் தலைமையிலானதாகக் குறுகிவிட்டது. அக்கட்சியின் ஓட்டுக் கவர்ச்சியாக இருந்த வி.பி.சிங் செயலூக்கமிக்க அரசியலில் இருந்து ஒதுங்கிவிட்டார். எஞ்சியிருக்கும் தலைவர்களோ "தடியெடுத்தவன் தண்டல்காரன்" என்று ஆட்டம் போடுகின்றனர்.

தி.மு.க., அசாம் கன பரிசத், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா போன்ற மாநில, பிராந்தியக் கட்சிகளும் தேசிய முன்னணியில் இருந்த விலகிவிட்டன. வெளியிலிருந்து ஆதரவு காட்டிய இசுலாமிய, அகாலிக் குழுக்கள் — கட்சிகளும் ஒதுங்கிவிட்டன. ஜனதா தளம் தவிர தேசிய முன்னணியின் முக்கிய உறுப்பான தெலுங்கு தேசக் கட்சியும் பிளவுபட்டு, அதன் தலைவர் என்.டி. ராமராவும் மரணமடைந்த பிறகு தேசிய முன்னணி என்பது பெயரளவுக்கே உள்ளது. உ.பி.யில் முலாயம் சிங் யாதவ், மராட்டியத்தில் குடியரசுக் கட்சிக் குழுக்கள், ஆந்திராவில் சிவபார்வதியின் தெலுங்கு தேசம், தமிழ்நாட்டில் மதிமுக ஆகியவற்றுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்வதன் மூலம் ஆதாயமடைய ஜனதா தளம் முயலுகிறது.

ஆனால் தமிழ்நாட்டில் பார்ப்பன - பாசிச ஜெயலலிதாவை இழுப்பதற்கு ஜனதா தள தலைவர்கள் செய்த முயற்சியும் அதன் தலைவர்கள் ஹவாலா இலஞ்ச - ஊழல் மோசடியில் சிக்கியதும் அதன் மாநில முதல்வர்கள் பெருமளவு இலஞ்ச - ஊழல்கள் புரிந்து அம்பலமானதும், ஜனதா தளம், தேசிய முன்னணியின் மதச்சார்பின்மை, ஜனநாயகம், இலஞ்ச - ஊழல் எதிர்ப்பு ஆகிய எல்லா முகத்திரைகளும் கிழிந்தன.

மூத்த சகோதரன் என்ற முறையில் சி.பி.எம். கட்சி ஆதிக்கம் வகிக்கும் இடதுசாரி முன்னணியோ மேற்கு வங்கம், திரிபுரா, கேரளாவுக்கு வெளியே நகர முடியாத அளவுக்கு முடங்கிப் போய் விட்டது. இந்த மாநிலங்களுக்கு வெளியே சிறு குழுக்களாக மட்டுமே இயங்கும் இடதுசாரி கூட்டணிக் கட்சிகள் பிளவுபட்டும் முரண்பட்டும் மோதிக் கொள்கின்றன. நிருபன் சக்ரவர்த்தி, பினாய் சௌத்துரி போன்ற சி.பி.எம். மின் மூத்த தலைவர்களே சி.பி.எம்.மின் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல் குற்றக் கும்பல்களுடனான கள்ள உறவை அம்பலப்படுத்துகின்றனர். தேசிய முன்னணியோடு சேர்ந்து சில காலம் ராஜீவ் - நரசிம்மராவ் கும்பலின் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்தும் போராட்டங்கள் நடத்தி வந்த இடது சாரி கூட்டணிக் கட்சிகள் பிறகு அதையும் கைவிட்டன. சி.பி.எம். மற்றும் ஜனதா தளத்தின் முதல் மந்திரிகளே அந்நிய முதலீடு கோரி வெளிநாடுகளிடம் கையேந்துவதும் வழக்கமாகி விட்டது. இந்த நிலையில் தேசிய முன்னணி - இடதுசாரிக் கூட்டணி என்பது பல்வேறு உதிரிக் கட்சிகளின் தேர்தல் வசதிக்கான சந்தர்ப்பவாதக் கூட்டுதானே தவிர கொள்கை அடிப்படையிலானதே அல்ல.

ஆகவே, இன்று மக்களிடம் ஓட்டுப் பொறுக்க வரும் அரசியல் கட்சிகள், கூட்டணிகள் எல்லாமே நாட்டு நலனிலோ, மக்கள் நலனிலோ துளியும் அக்கறை கொண்டவை கிடையாது. இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல் குற்றங்கள் ஆகிய சமூக விரோதச் செயல்கள் மூலம் பகற் கொள்ளையடிக்கும் கும்பல்கள்தாம். தமது சுயநலனுக்காக ஏகாதிபத்தியத்திற்கு நாட்டை மறுஅடகு வைப்பவைதான். இந்தச் சமூக விரோத, நாட்டு விரோதச் செயல்களை அதிகாரபூர்வமாகச் செய்யும் உரிமைக்கான தேர்தல் சூதாட்டம்தான் இப்போது வருகிறது. மெத்தப் படித்த அறிவாளிகளும் கூட இதை ஏற்றுக் கொண்டு "எல்லோரும் அயோக்கியர்கள்தான்; வேறு வழி இல்லை; இருப்பவர்களிலேயே குறைந்த அளவு அயோக்கியனைத் தேர்ந்தெடுப்பதுதான் புத்திசாலித்தனம்" என்று வாதிடுகின்றனர்.

இந்த அரசியல் சூதாட்டத்தில் எந்தக் கூட்டணி, எந்தக் கட்சி, எந்த வேட்பாளர் வெற்றி பெற்றாலும் சரி; தோல்வியுறப் போவதென்னவோ மக்கள்தான். எந்தவொரு சூதாட்டத்திலும் பகடைக் காய்களும், பணயப் பொருட்களும் வெற்றி பெற்றதாகக் கண்டதுண்டா?

அரசியல் கட்சிகள் மட்டுமல்ல; அவற்றுடன் அதிகார வர்க்கம், போலீசு, நீதித் துறை ஆகிய அரசு அமைப்பு முழுவதுமே இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளால் அழுகி நாறுகிறது. ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி அரசு பயங்கரவாதத் தாக்குதல் நடத்தி மக்களையும் போராடும் இயக்கங்களையும் அடக்கி ஒடுக்குகின்றனர்.

இந்த நிலையில் யாருக்கு ஓட்டுப் போடுவது என்ற சிந்தனையே தேவையில்லை. ஏன், எதற்கு ஓட்டுப் போட வேண்டும்? ஓட்டுப் போடுவதால் ஏற்படும் ஆட்சி மாற்றங்கள் உண்மையான அரசியல் மாற்றங்களைக் கொண்டு வருமா? அதற்கு வெளியே புரட்சிப் போராட்டங்களின் மூலம் ஒரு புதிய ஜனநாயக அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு ஏன் முயலக் கூடாது என்று சிந்தனைதான் இப்போது தேவை.



காங்கிரசு ‘தியாகி’களாலேயே ராவுக்கு செருப்படி



படிப்பகம்

www.padippakam.com

## விஷச் சாராயப் படுகொலை: நிவாரணம் கோரி தொடர் ஆர்ப்பாட்டம்

கடந்த புத்தாண்டு தினத்தன்று திருச்சி உறையூரில் விஷச் சாராயத்தால் 35-க்கும் மேற்பட்டோர் பலியாகினர். கணவனை இழந்த பெண்கள் கைக் குழந்தைகளுடன் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். பல கோடி ரூபாய்களை வாரியிறைத்து ஊதாரித்தனமான மாநாடு நடத்திய ஜெயா கும்பலோ, இதுவரை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதலாக அறிக்கைகூட வெளியிடவில்லை. கள்ளச்சாராயம் விற்க உறுதுணையாக நின்ற அமைச்சர் கு.ப. கிருஷ்ணன் இன்று வரை எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

இந்நிலையில், மக்கள் உயிரை மதிக்காத இந்தக் கேடு கெட்ட அரசுக்கு எதிராகப் பெண்கள் விடுதலை முன்னணி, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் கோரியும், மதுவிலக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரியும் 2.3.96 அன்று உறையூரில் தொடர் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

தோழர் இராணி தலைமை தாங்க, தோழர்கள் இந்துமதி, தமிழ்ச்செல்வி ஆகியோர் சிறப்புரையாற்ற ஏறத்தாழ 65 பேருக்கு மேல் பங்கேற்ற இந்நிகழ்ச்சிக்கு உள்ளூர் மக்கள் கடைசி வரை இருந்து தமது ஆதரவை நல்கினர். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவதோடு, மனித உரிமைக் கழகத்தின் துணையோடு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் பெண்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது.

தகவல்:
பெண்கள் விடுதலை முன்னணி

**திருச்சியில் பெண்கள் விடுதலை முன்னணியினரின் தொடர் ஆர்ப்பாட்டம்**



## எழில்மிகு சென்னையில் எரிகின்றன குடிசைகள்

சென்னையில் நகர்ப்புற சேரிப் பகுதியிலுள்ள குடிசைகள் எரிந்து சாம்பலாவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. குறிப்பாக, சென்னை கக்கன்ஜி நகர், அம்பேத்கர் நகர் ஆகிய பகுதிகளில் - காந்தி நகர் குடியிருப்பை ஒட்டிய சுமார் 1500 குடிசை வீடுகள் அண்மையில் தீப்பற்றி எரிந்து சாம்பலானது. கடந்த ஆறு மாதங்களில் ஐந்து முறை இப்படி குடிசைகள் எரிந்து போகும் துயரக் கதை இப்பகுதியில் தொடர்கிறது. கடந்த மாதத்தில் பற்றிய தீயில் ஒரு குழந்தை இறந்து போனது. விபத்திலிருந்து தப்பிக்க ஒரு பெண் குழந்தை சுவர் ஏறிக் குதித்து, கால் முறிந்து போனது. இத்தீ விபத்துகள் பகலில் நடந்ததால், உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. இரவில் நடந்திருந்தால் பேரழிவு நேர்ந்திருக்கும்.

வீட்டு மனைத் தொழில் நடத்தும் சில பெரும்புள்ளிகள் புறம்போக்கு நிலங்களை அபகரிக்க இவ்வாறு செய்வதாகவும், போலீசு நிலையத்துக்குத் தொலைபேசியில் மிரட்டல்கள் வந்ததாகவும் வதந்திகள் நிலவுகின்றன. ஆனாலும் போலீசார் எந்தவொரு பாதுகாப்பு நடவடிக்கையும் மேற் கொள்ளவில்லை. இப்பகுதியிலுள்ள ஓட்டுக் கட்சிகள் ஓரிருவேளைக்கு உணவு ஏற்பாடு செய்ததோடு முடங்கிவிட்டன. பின்னர், பாதிக்கப்பட்ட மக்கள் இரண்டு முறை பேருந்து மறியல் செய்த பிறகுதான் ஒரு குடும்பத்துக்கு 600 ரூபாயும் வேட்டி - சேலையும் ஜெயா அரசு கொடுத்துள்ளது. மக்கள் வேதனையால் தவித்துக் கொண்டிருந்த போது, குப்பை லாரியில் உணவைக் கொண்டு வந்து கொடுத்தனர். அந்த உணவில் புழு, வண்டு காணப்பட்டதால், அதைத் தூக்கியெறிந்து விட்டு, பாதிக்கப்பட்ட மக்கள் குழந்தைகளுடன் பட்டினியால் பரிதவித்தனர்.

சாராய உடையாருக்கு அடுக்கு மாடிக் கட்டிடம் கட்ட புறம்போக்கு நிலத்தைத் தாரை வார்த்து எல்லா வசதிகளையும் செய்து தரும் அரசு, ஏழைகள் என்றால் எகத்தாளம் செய்வதைக் கண்டித்தும், உடனடி நிவாரணம் கோரியும் ம.க.இ.க., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இப்பகுதியில் சுவரொட்டி இயக்கத்தை மேற்கொண்டன. பாதிக்கப்பட்ட மக்கள், ''இனி எவனாவது ஓட்டுக் கேட்டு வந்தால் விரட்டியடிப்போம்'' என்று அடுத்த கட்ட போராட்டத்திற்குத் தயாராகி வருகிறார்கள்.

தகவல்: புரட்சிகர மாணவர்
இளைஞர் முன்னணி,
சென்னை.

**சாம்பலாகிப் போனது குடிசைகள் மட்டும்தானா?**




படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

### பாசிச அடக்குமுறைக்குப் பல்லக்கு

பஞ்சமி நில மீட்புப் போராட்டத்தையொட்டி, கடந்த 94-ம் ஆண்டு அக்டோபர் 10-ந் தேதி செங்கல்பட்டில் துணை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தாழ்த்தப்பட்டோர் மறியல் செய்ய முயன்றனர். இப்போராட்டத்தை துப்பாக்கிச் சூடு நடத்தி மிகக் கொடூரமாக ஒடுக்கியது தமிழகப் போலீசு. இத்துப்பாக்கிச் சூட்டில் இரு தாழ்த்தப்பட்டோர் இறந்ததோடு, பலர் படுகாயமுற்றனர். இத்துப்பாக்கிச் சூடு பற்றி விசாரணை நடத்திய பெல்லி கமிசன், "போலீசு துப்பாக்கிச் சூடு நடத்தியதில் நியாயமுள்ளதென்றும், குறைந்தபட்ச பலாத்காரத்தைத்தான் போலீசு பிரயோகித்துள்ளதென்றும்" தீர்ப்பளித்துள்ளது.

### தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு கொளுத்தப்பட்டது

உ.பி. மாநிலத்தில் சிக்ரி கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோருக்கும் தாகூர் மேல் சாதியினருக்கும் விறகு பொறுக்குவதில் தகராறு எழுந்தது. இதையடுத்து ஹோலிப் பண்டிகையன்று (மார்ச் 5) 500-க்கும் அதிகமான தாகூர் சாதி வெறியர்கள் கைத்துப்பாக்கிகள், ஈட்டிகள், இரும்புக் கம்பிகளோடு திரண்டு வந்து தாழ்த்தப்பட்டோரை நரவேட்டையாடினர். அவர்களின் உடமைகளைக் கொள்ளையடித்ததோடு, வீடுகள் அனைத்தையும் தீ வைத்துக் கொளுத்தினர். இத்தாக்குதலில் ஒருவர் இறந்து போனார். அம்மக்களுக்குச் சொந்தமான எருதுகள் அனைத்தும் உயிரோடு எரிந்து சாம்பலாயின. உள்ளூர் போலீசோ தாக்குதலின் பொழுது தாகூர்களுக்குச் சாதகமாக ஓடி ஒளிந்து கொண்டது.

### அமெரிக்காவின் சதித்திட்டம்

தன்னை எதிர்க்கும் நாடுகளின் அரசுகளைச் சதித்தனமாகக் கவிழ்க்க முயலுவதில் அமெரிக்கா கைதேர்ந்த வல்லரசு. சமீபத்தில் அமெரிக்க காங்கிரசின் இரு சபைகளும் ஈரானிய அரசை மறைமுகமான வழிகளில் தூக்கியெறிய 80 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளன. கள்ளப்பணத்தைப் புழங்கவிட்டுப் பொருளாதாரத்தை முடக்குவது, தலைவர்களைப் படுகொலை செய்வது, குண்டு வெடிப்பு நடத்துவது போன்ற பயங்கரவாதச் செயல்கள்தான் இம்மறைமுக வழிகள் என்பதை இங்கு சொல்லத் தேவையில்லை.



தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனி டீ கிளாஸ்

### ஓட்டுப் பொறுக்க சாராயம்

கடந்த சனவரி மாதம் கர்நாடக மாநிலத்தில் நகரசபைத் தேர்தல் நடந்தது. ஓட்டுப் பதிவுக்கு முதல் நாளன்று, சிறைத் துறை மந்திரி மேராஜுதின் நிஜாமுதின் பட்டேல், ஹம்னாபாத் நகரில் வழமையாகத் தங்கும் வீட்டில் இருந்து பல நூறு சாராயப் புட்டிகளைக் கைப்பற்றினர் போலீசார். சாராயத்தைக் காட்டி ஓட்டுப் பொறுக்க முயன்ற மந்திரியின் பண்பாடு விசாரணையில் அம்பலமானது. "எதிர்க்கட்சிகளின் சதி" என ஒப்பாரி வைத்த முதல்வர் தேவகௌடா, 42 நாள் கழித்து நிர்பந்தம் காரணமாக இம்மந்திரியைப் பதவியில் இருந்து கழட்டி விட்டுள்ளார்.

### யெல்ட்சின் மீது ஐ.எம்.எஃப்-ன் கரிசனம்

யெல்ட்சின் ரசிய மக்களிடையே செல்லாக் காசாகிப் போனாலும், அமெரிக்கா அவரைக் கைவிடத் தயாராக இல்லை. ரசியாவில் நடக்கவுள்ள அதிபர் தேர்தலில் யெல்ட்சினை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்பதற்காக, சமீபத்தில் ஐ.எம்.எஃப் ரசியப் பொருளாதாரத்தைச் சீரமைப்பது எனும் பெயரில் 40,800 கோடி ரூபாய் கடனாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக மூன்று வருட காலத் திட்டமொன்றில் யெல்ட்சின் அரசுடன் சேர்ந்து கையெழுத்திட்டுள்ளது, அந்நிறுவனம்.

### பார்ப்பனிய மீட்பு

"அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் வெள்ளிக்கிழமை தோறும் காலை வேளைகளில் ஒரு மணி நேரம் தாமதமாக அலுவலகத்துக்கு வரலாம்" எனும் சலுகை அளித்து உத்தரவிட்டுள்ளது தமிழக அரசு. வெள்ளிக்கிழமைகளில் விரதமிருப்பது, கோவிலுக்குச் செல்வது என்ற பார்ப்பனப் பண்பாட்டை வளர்ப்பதற்குத்தான் இச்சலுகையை வழங்கியுள்ளது பார்ப்பன ஜெயா கும்பல்.

### தாழ்த்தப்பட்டோர் செருப்பு போடத் தடை

தமிழ்நாட்டில் இராமநாதபுரம் நகருக்கு அருகிலுள்ள கீழப்பெருந்துறை எனும் கிராமத்தில், தாழ்த்தப்பட்டோர் சிலர் தெருக்களில் செருப்புடன் நடந்தனர் என்பதற்காக, அக்கிராமத்தைச் சேர்ந்த மேல்சாதி வெறியர்களால் தாக்கப்பட்டனர். மேலும் அவர்கள் மீது போலீசின் துணையோடு பொய் வழக்குகளையும் போட்டது சாதிவெறிக் கும்பல். இதனால் 32 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் அக்கிராமத்தை விட்டு வெளியேறிவிட்டன. பரமக்குடிக்கு அருகிலுள்ள பெருங்கரை கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் செருப்பு அணிந்ததற்காக அவர்களின் வீடுகளைக் கொளுத்திவிட்டது, மேல்சாதிக் கும்பல்.

### குடிநீர் கேட்டால் குண்டர்களை அனுப்பினார்கள்

திண்டுக்கல்லுக்கு அருகேயுள்ள ஒட்டன்சத்திரம் பகுதியைச் சேர்ந்த பல கிராமப் பொது மக்கள் குடி தண்ணீர் தரக்கோரி மார்ச் 5-ந் தேதி சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்பொழுது அந்த வழியே வந்த ஒட்டன்சத்திரம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. செல்லச்சாமி, சாலை மறியலில் ஈடுபட்ட பெண்களைக் கீழ்த்தரமாக ஏசியுள்ளார். இதனால் ஆத்திரங்கொண்ட பொது மக்கள் எம்.எல்.ஏ.வைத் தாக்க முயல, போலீசு இடையே புகுந்து அவரைக் காப்பாற்றச் சென்றது. சிறிது நேரத்திலேயே எம்.எல்.ஏ.வினது அடியாட் படை ஆயுதங்களோடு இறங்கி, மறியலை முடித்துக் கொண்டு கிளம்பத் தயாரான பொது மக்களைத் தாக்கியுள்ளது.

### பெண்களுக்கு எதிரானக் கட்டளைகள்

ஆப்கானிஸ்தானில் இயங்கிவரும் மதவெறி அமைப்பான தாலிபான், "அந்நாட்டுப் பெண்கள் பள்ளிக் கூடங்களுக்குச் செல்லக் கூடாது; வேலைக்குச் செல்லும் பெண்கள் வேலையை இராஜினாமா செய்ய வேண்டும்; தலைமுதல் கால்விரல் நுனி கூடத் தெரியாதவாறு பர்தா அணிந்துதான் வெளியே வர வேண்டும்" எனக் கட்டளையிட்டுள்ளது. மேலும், "ஆண்கள் துணையின்றி வெளியே செல்லும் பெண்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்" என்றும் எச்சரித்துள்ளது. வெளிநாடுகளைச் சேர்ந்த பெண்கள் அந்நாட்டினுள் கார் ஓட்டுவதும் இவ்வியக்கத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



காஷ்மீர்:

## கைக்கூலிகளுடன் பேச்சுவார்த்தை மோசடித் தேர்தல் திணிப்பு

எரியும் தீயில் எண்ணெயை ஊற்றியது போல, இந்திய அரசு பயங்கரவாதிகள் காஷ்மீரில் பேச்சுவார்த்தை நாடக மாடி, மோசடித் தேர்தலைத் திணிக்கக் கிளம்பியுள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு இந்திய ஆட்சியாளர்களிடம் சரணடைந்த ஒரு சில முன்னாள் போராளிகள் இரு தரப்பு பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளதைக் காட்டி, ஜனநாயகம் - அமைதியை நிலைநாட்டும் முயற்சியாக, ஏழாண்டுகளுக் குப் பிறகு இப்போது தேர்தலை நடத்தப் போவதாக ராவ் கும்பல் அறிவித்துள்ளது.

பொதுத் தேர்தல் அறிவிப்புக்கு இரு வாரங்களுக்கு முன்பு, 4 முன்னாள் போராளிகள் காஷ்மீரின் நிரந்தரத் தீர்வுக்கான அரங்கம் (FPR) என்ற அமைப்பை நிறுவி, இந்திய அரசு டன் பேச்சுவார்த்தை நடத்த முன் வருவதாக அறிவித்தனர். அவர்க ளோடு மேலும் 5 முன்னாள் போரா ளிகள் சேர்ந்து கொண்டு, கடந்த மார்ச் 15 அன்று மத்திய உள்துறை அமைச்சர் சவானுடன் ஆரம்ப பேச்சு வார்த்தைகளை நடத்தியுள் ளனர். இந்திய இராணுவத்தின் தேடுதல் வேட்டை - அக்கிரமங் களை உடனே நிறுத்த வேண்டும்; சிறையிலுள்ள போராளிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்; துரோகிகளுக்கு இந்தியா ஆயுத உதவி செய்வதை நிறுத்த வேண்டும் - ஆகிய கோரிக் கைகள் ஏற்கப்படாத போதிலும், இந்தப் பேச்சுவார்த்தை நம்பிக்கை யூட்டுவதாகக் கூறி, உள்துறை அமைச்சகச் சிறப்புச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவை நிறுவி, தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.



இந்தியாவின் கைக்கூலி அமைப்பான இக்வானுல் முஸ்லிமுனின் தலைவர் அன்சாரி

இதைத் தொடர்ந்து முன்னாள் போராளிகளும், அவர் களை ஆதரிக்கும் முஸ்லீம் முஜாஹிதீன், தேசபக்த முன் னணி முதலான குழுக்களும் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளன. ஜம்மு - காஷ்மீரின் 6 நாடாளு மன்றத் தொகுதிகளுக்கு மூன்று கட்டமாகத் தேர்தல் நடை பெறும் என்றும், பின்னர் 'போராளிகளுடன்' பேச்சு வார்த்தை நடத்தி, சட்டமன்றத் தேர்தலையும் நடத்தி, அமை தியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டப் போவதாக ராவ் கும்பல் கூறுகிறது. 'போராளிகளின்' மனமாற்றத்தை வரவேற்று, காஷ்மீரில் நம்பிக்கையின் ஒளிக்கீற்று தோன்றி யுள்ளதாகத் 'தேசிய' பத்திரிகைகள் பிரமையூட்டுகின்றன.

ஆனால், பேச்சுவார்த்தை நடத்திய இம்முன்னாள் போராளிகளுக்கும் அவர்களது பெயர்ப்பலகை அமைப்புக ளுக்கும் காஷ்மீரில் கடுகளவுகூடச் செல்வாக்கு இல்லை. காஷ்மீர் விடுதலைப் போராளிகள் மற்றும் கட்சிகள் - குழுக் களின் கூட்டமைப்பான ஹுரியத் முன்னணியில் இவர்கள் அங்கம் வகிக்கவுமில்லை. இத்தனை காலமும் ஹுரியத் முன் னணியுடன் பேச்சுவார்த்தை நடத்த மறுப்பது, அதே சமயம் ஹுரியத்தை எதிர்க்கும் பெயர்ப்பலகை அமைப்புகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவது, ஹவாலா பணம் காஷ்மீர் தீவிரவாதிகள் சிலருக்குப் பட்டுவாடா செய்யப்பட்டிருப் பது - ஆகிய அனைத்தும் இக்கும்பல் இந்திய அரசின் கைக்கூலிகள்தான் என்பதை நிரூபித்துக் காட்டுகின்றன. எனவேதான் இப்பேச்சுவார்த்தையை எதிர்த்துக் காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் வேலை நிறுத்தம் - கடையடைப்பு போராட்டங்கள் தொடர்கின்றன.

அதே சமயம், காஷ்மீரின் சுய நிர்ணய உரிமைக்காகப் போராடிவரும் ஹுரியத் முன்னணி ஒருங்கிணைந்த கண் ணோட்டமின்றி, கருத்து முரண்பாடுகளால் செயலிழந்து போயுள்ளது. நீண்ட காலமாக ஆயுதமேந்திப் போராடி வந்த ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி (JKLF) பிளவுப்பட் டுப் போயுள்ளது. இதர குழுக்களிலும் பிளவுகளும் மோதல் களும் நீடிக்கின்றன. இந்நிலைமைகளைச் சாதகமாக்கிக் கொண்டு, கைக்கூலிகளை உருவாக்கி, போராளிக் குழுக்க ளுக்கிடையே சீர்குலைவை ஏற்படுத்துவது; பயங்கரவாதத் தைக் கட்டவிழ்த்துவிட்டு ஒடுக்குவது; துரோக அமைப்பு களின் பெயரால் பேச்சு வார்த்தை நாடகமாடி மோசடித் தேர்தலை நடத்தி, ஜனநாயகத்தை நிலை நாட்டி விட்டதாக மாய்மாலம் செய் யும் நோக்கத்துடன் பாசிச ராவ் கும் பல் கிளம்பியுள்ளது.

இதனாலேயே போராளிக ளும் முன்னணியாளர்களும் குறி வைத்துக் கொல்லப்படுகிறார்கள். தேர்தலைப் புறக்கணிக்கும் ஜமாத் - இ - இஸ்லாமி கட்சியினரை இரக சியமாகக் கொன்றொழித்து, பயபீ தியூட்டி, தேர்தலில் பங்கேற்றுத் தம்மை ஆதரிக்கச் செய்ய அரசு பயங்கரவாதிகள் முயற்சித்து வரு கிறார்கள். இவையெல்லாம் ஹுரி யத் முன்னணியை எதிர்க்கும் இக் வானுல் முஸ்லிமூன், முஸ்லிம் முஜாஹிதீன் முதலான அமைப்பு கள் நடத்திய தாக்குதல்களாகக் கூசாமல் புளுகி வருகிறார்கள். இவ் வாறு கடந்த இரு மாதங்களில் மட்டும் ஏறத்தாழ 1100 பேர் கொல்லப்பட்டு, பனிமலை எங்கும் இரத்த ஆறு ஓடுகிறது. அது எரிமலையாய்க் கிளர்ந்தெழப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை.

## பனிமலையில் பரவிவரும் கம்யூனிசப் புரட்சிப் போர்

இந்தியாவின் வடக்கேயுள்ள அண்டை நாடான நேபா ளத்தில் கம்யூனிசப் புரட்சியாளர்கள் நடத்தி வரும் போராட் டங்களைக் கண்டு அந்நாட்டின் ஆளுங்கும்பல்கள் பீதியில் உறைந்து போயுள்ளன. நேபாளத்தில் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் பிப்ரவரி 19-ம் நாளை 'ஜனநாயக' தினமாகக் கொண்டாடிக் கொண்டிருந்த போது, கம்யூனிசப் புரட்சியா ளர்கள் இப்போலி ஜனநாயகத்தை அம்பலப்படுத்தி, போராட்டங்களை மேற்கொண்டனர். அது நேபாளத்தின் 10-க்கும் மேற்பட்ட மேற்கு மலை மாவட்டங்களில் எதிரொ லித்தது. கிராமப்புற விவசாயிகள் கம்யூனிஸ்டுகளின் தலை மையில் திரண்டு போலீசு நிலையங்களைச் சூறையாடி தீ வைத்தனர். இதே போல அரசு அலுவலகங்களும் தாக்கப் பட்டன. இதைத் தொடர்ந்து அரசுப் படைகள் பெருமளவில் குவிக்கப்பட்டு, கம்யூனிஸ்டுகள் வேட்டையாடப்பட்டு வரு கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



நேபாளத்தில் மன்னராட்சிக் கொடுங்கோன்மை முடிவுக்கு வந்த பிறகு, அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த எந்தவொரு ஓட்டுக் கட்சியும் கிராமப்புற மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியைக் கொண்டு வரவில்லை. மக்களின் வறுமையை ஒழிப்பதில் அவர்கள் வாய்ச் சொல் வீரர்களாகவே இருந்தனர். பதவி வெறி பிடித்த இக்கட்சிகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்யவும் முடியாமல் விரைவிலேயே அம்பலப்பட்டுப் போயின. இத்தகைய போலி ஜனநாயகத்தை மறுதளித்து, ஓட்டுப் பாதையைப் புறக்கணித்து புரட்சிப் பாதையில் நேபாள கம்யூனிஸ்டு கட்சி (மாவோயிஸ்ட்) மக்களை அணிதிரட்டி வருகிறது. தலைமறைவாகச் செயல்படும் இக்கட்சியானது இளைஞர்கள் - பெண்களைக் கொண்ட கொரில்லாப் படையையும் கட்டியமைத்துள்ளது. நிலப்பிரபுக்களான ராணாக்களின் ஆதிக்கத்தை எதிர்த்து விவசாயிகளைத் திரட்டி நிலத்திற்காகவும் அரசியல் அதிகாரத்திற்காகவும் ரோல்பா, ஜாஜர்கோட், ருகும்கோட் மாவட்டங்களில் புரட்சிகர போராட்டங்களை நடத்தி வெற்றி பெற்று வருகிறது. இது தவிர, இந்தியாவின் மேலாதிக்க நடவடிக்கைகளையும் தலையீடுகளையும் எதிர்த்து கடந்த பிப்ரவரி 22-ம் நாளன்று தலைநகர் காத்மண்டுவில் ஆர்ப்பாட்ட பேரணியையும் நடத்தியுள்ளது.

நேபாளத்தில் பற்றிப் படர்ந்து வரும் புரட்சிப் பேரலையைக் கண்டு அந்நாட்டு ஆளுங்கும்பல்கள் மட்டுமல்ல; அவர்களது பங்காளிகளான இந்திய ஆட்சியாளர்களும், சீரழிந்த நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு முட்டுக் கொடுத்து வரும் இடது, வலது போலி கம்யூனிஸ்டுகளும் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

## புதிய வேட்பாளர் பட்டியல்: போலிகளின் மாய்மாலம்

மே. வங்கத்தில் 19 ஆண்டு காலமாக நிலையான ஆட்சி நடத்தி சாதனை புரிந்துள்ளதாக மார்தட்டிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகள், எல்லா கட்சிகளுக்கும் முன்பாகவே சட்டமன்ற, நாடாளுமன்ற வேட்பாளர் பட்டியலை பரபரப்பாக வெளியிட்டுள்ளனர். கூட்டணிக் குழப்பமோ, கொள்கைத் தகராறோ இல்லாத ஒரே அணி 'இடதுசாரி முன்னணிதான் என்று மார்தட்டிக் கொள்கின்றனர். ஆனால் இந்த வேட்பாளர் பட்டியலானது, கட்சிக்குள் நிலவும் கோஷ்டிப் பூசலையும், கட்சியின் ஊழலை விமர்சிப்போருக்கு கல்தா கொடுக்கும் சர்வாதிகாரப் போக்கையும் அம்பலப்படுத்திக் காட்டி விட்டது. இதுதவிர, அம்பலப்பட்ட ஊழல் பெருச்சாளிகளை கழற்றி விட்டு தங்களை யோக்கிய சிகாமணிகளாக காட்டிக் கொள்ளும் நோக்கத்தோடும் புதிய வேட்பாளர் பட்டியலை போலிகள் வெளியிட்டுள்ளனர்.

இடதுசாரி முன்னணியிலுள்ள 'மார்க்சிஸ்டு' கட்சி புதிய வேட்பாளர் பட்டியலில் 6 மந்திரிகளையும் 82 எம்.எல்.ஏக்களையும் கழற்றி விட்டுள்ளது. இதே போல வலது கம்யூனிஸ்ட் கட்சி, 2 மந்திரிகளையும் 5 எம்.எல்.ஏக்களையும் இம்முறை ஒதுக்கி வைத்துள்ளது. கல்கத்தா குண்டு வெடிப்புக்குக் காரணமான கிரிமினல் ரகசிய உலகப் பேர்வழியான ரஷீத்கானுக்கும், 'மார்க்சிஸ்டு' தலைவர்களுக்கும் உள்ள கள்ள உறவு ஏற்கனவே அம்பலமாகி சந்தி சிரிக்கும் நிலையில் ரஷீத்கானின் நெருங்கிய கூட்டாளியும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தலைமைக் கொறடாவுமான லகிகாந்த தேவ் புதிய வேட்பாளர் பட்டியலில் நீக்கப்பட்டுள்ளார். தனது முதலாளித்துவ மகனாகிய ரஞ்சித்துக்கு முறைகேடான வழிகளில் உதவி செய்து அம்பலப்பட்ட சுகாதாரத் துறை அமைச்சரான பிரசாந்தசுர் இம்முறை கழட்டி விடப்பட்டுள்ளார். இதே போல வலது கம்யூனிஸ்ட் கட்சியின் ஊழல் மந்திரிகளான டாக்டர் ஓமர் அலி, மதன் பாஃவ்ரி ஆகியோரும் புதிய வேட்பாளர் பட்டியலில் இடம் பெறவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, ஜோதிபாசு அரசின் ஊழல் மோசடிகளை பகிரங்கமாக அம்பலப்படுத்திய மூத்த 'மார்க்சிஸ்டு' அமைச்சரான பினாய் சவுத்திரியின் பெயர் புதிய வேட்பாளர் பட்டியலில் இடம் பெறவில்லை. ''பழைய தோழர்களை கட்சிப் பணிகளுக்கு அனுப்புவதால், புதிய தோழர்களை வேட்பாளர்களாக அறிவித்துள்ளோம்'' என்று போலிகள் மாய்மாலம் செய்தாலும், இது கட்சிகள் நிலவும் கோஷ்டிப் பூசலின் வெளிப்பாடுதான் என்பதை மூடிமறைக்க முடியவில்லை. முன்பெல்லாம் மாவட்டக் கமிட்டி வேட்பாளர்களை முன்மொழிந்து மாநிலக் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பும். ஆனால், பெருகி வரும் கோஷ்டிப் பூசலின் விளைவாக, இப்போது மாநிலக் கமிட்டியே வேட்பாளர்களைத் தீர்மானிக்கிறது. இது சர்வாதிகாரமானது என்று பல மாவட்டக் கமிட்டித் தலைவர்கள் வெளிப்படையாகவே விமர்சிக்கின்றனர்.



சி.பி.எம். ஓரங்கட்டிய பினாய் சௌத்ரி

இதுதவிர, பிரகாஷ்கரத், சீத்தாரம் எச்சூரி ஆகிய 'மார்க்சிஸ்டு' பிரமுகர்களின் தலைமையிலான குழு, சைபுதின் சவுத்திரி, ஜோதிபாசுவின் மருமகனாகிய அமல்தத்தா ஆகியோருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சீட்டு தரக்கூடாது என்று கட்சிக்குள் கலகம் செய்கிறது. ஆனால் ஜோதிபாசுவோ இக்கும்பலை எதிர்க்கிறார். பின்னர் மத்தியக் கமிட்டியில் சமரச பேரங்கள் நடத்தி சவுத்திரி, தத்தா ஆகியோருக்கு சீட்டு தருவதில்லை என்று முடிவாகியுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த ஜோதிபாசு கோஷ்டி, இவர்களுக்கு எம்.எல்.ஏ. சீட்டு கொடுத்து மந்திரிகளாக்கப் போவதாக சவால் விடுக்கிறது. இத்தனையும் மூடி மறைத்து விட்டு, புதிய முகங்களை வேட்பாளர்களாக அறிவித்துள்ளதாக போலிகள் வெட்கமின்றி மார்தட்டிக் கொள்கின்றனர்.

## மாலத்தீவு உளவுச் சதி விவகாரம்: இந்தியாவின் மேலாதிக்க - தேசிய வெறி அம்பலப்பட்டுப் போனது

ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு 1994 அக்டோபரில், கேரளாவிலுள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தில் மிகப் பெரிய உளவுச் சதி நடந்துள்ளதாக பரபரப்பாக செய்தி வெளியானதும், மாலத்தீவு நாட்டைச் சேர்ந்த மரியம் ரஷீதா, பௌசியா ஹசன் என்ற இரு பெண்கள், நம்பி நாராயணன், சசிகுமாரன் ஆகிய இந்திய விண்வெளி விஞ்ஞானிகள், பெங்களூரைச் சேர்ந்த இரு வர்த்தகர்கள், ராமன் சிறீவஸ்தவா என்ற போலீசு இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பாகிஸ்தா



படிப்பகம்

www.padippakam.com



ளின் சதி, ஏவுகணை விஞ்ஞான ரகசியங்கள் கடத்தல், பணத்திற்கும் பெண் சுகத்திற்கும் விஞ்ஞானிகள் விலை போனார்கள் என்று திடுக்கிடும் செய்திகள் வெளிவந்தன. கைதானவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வரும்போது பொதுமக்கள் அவர்கள் மீது ஆத்திரமடைந்து கற்களை வீசித் தாக்குமளவுக்கு இந்த விவகாரம் நாடெங்கும் பரபரப்பூட்டியது. நாட்டை உலுக்கிய இந்த உளவுச் சதி வழக்கு சி.பி.ஐ.யின் விசாரணைக்கு விடப்பட்டது.

மாலத்தீவைச் சேர்ந்த ரஷீதா இதய நோய்க்கு மருத்துவம் பார்க்க கேரளாவுக்கு வந்தவர். கைதான பின் அவர் அனுபவித்த மிருகத்தனமான சித்திரவதைகளால், போலீசார் கூறியபடியே பொய்யான வாக்குமூலம் கொடுத்தார்.



சதிகாரியாக சித்தரிக்கப்பட்ட ரஷீதா

அடி, உதை, சித்திரவதைகளுக்குப் பிறகு, உனது மகளைக் கற்பழித்து கொன்று விடுவோம் என்று போலீசார் மிரட்டியதால், உளவுச் சதியில் ஈடுபட்டதாக பொய்யான வாக்குமூலம் அளித்தார் பௌசியாஹசன். கிரியோஜெனிக் ஏவுகணையில் திறமை மிக்க விஞ்ஞானியான நம்பி நாராயணனின் வாழ்க்கையே இந்தச் சதி வழக்கால் சிதைந்து போனது. அவமானம் தாங்காமல் அவரது மனைவிக்குப் பைத்தியம் பிடித்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மற்றொரு விஞ்ஞானியான சசிகுமாரனுக்கு போலீசாரின் காட்டுமிராண்டித் தனமான சித்திரவதையால் பல் உடைந்து, காதுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இத்தனைக் கொடுமைகளுக்குப் பிறகு இப்போது எந்த உளவுச் சதியும் நடக்கவில்லை; எந்த ரகசியமும் கடத்தப்படவில்லை; கோடிக்கணக்கில் பணமும் கைமாறவில்லை என்று சி.பி.ஐ. அறிவித்துள்ளது. இந்த வழக்கு விசாரணையை விரைவில் நிறுத்தி விடப் போவதாகவும் அறிவித்துள்ளது. இருப்பினும் நீதிமன்றத்தில் வழக்கு தள்ளுபடி செய்யப்படாததால், ரூ. 10 லட்சம் பிணைத் தொகை கட்டிவிட்டு பிணையில் செல்லலாம் என நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்த அளவுக்கு பணவசதி இல்லாத நிலையில், உதவுவதற்கும் யாருமில்லாத நிலையில் கைதான நிரபராதிகள் பரிதவிக்கின்றனர். இவர்களது வழக்கறிஞர்கள் இந்த அநீதியை எதிர்த்து சர்வதேச மனித உரிமைக் கமிஷனில் முறையீடு செய்ய முயற்சித்து வருகின்றனர்.

ராமன் சிறீவஸ்தவாவுக்கு எதிரான போலீசு அதிகாரிகள் சிலரும், நம்பி நாராயணன், சசிகுமாரனுக்கு எதிரான சில விஞ்ஞானிகளும் சேர்ந்து தீட்டியது தான் இச்சதி நாடகம் என உண்மைகள் இப்போது கசிந்துள்ளது. ஆனால் ஒன்றரை ஆண்டுக்கு முன்பு இக்கட்டுக் கதையை நம்பி போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எல்லா ஓட்டுக் கட்சிகளும் "ஐயோ! நாட்டுக்கு ஆபத்து!" என்று கூப்பாடு போட்டு வெட்கமின்றி தேசிய வெறியைக் கிளறி விட்டன. மாலத்தீவு சின்னஞ்சிறு ஏழை நாடாக இருப்பதால் மேலாதிக்க வெறியோடும் ஆணவத்தோடும் ஆட்சியாளர்கள் இவ்வளவு கூத்துக்களையும் நியாயப்படுத்தினர். ஆனால் விசாரணையில் உருப்படியாக எந்தவொரு ஆதாரத்தையும் காட்ட முடியாமல் போய், இந்தியாவின் குறுகிய தேசிய வெறி கோரமுகம் கிழிந்து தொங்குகிறது.

## தூத்துக்குடி மீனவர்களின் முன்னுதாரணமிக்க போராட்டம்

ஆழ்கடலில், இந்தியக் கடல் எல்லைக்குள் அந்நிய பகாசுர மீன்பிடிக் கப்பல்களுக்கு இந்திய அரசு அனுமதியளித்துள்ளதை எதிர்த்து நாடு தழுவிய அளவில் போராட்டங்களை நடத்திய மீனவர்கள், இப்போது தூத்துக்குடியில் அந்நிய நச்சுக் கழிவு ஆலைக்கு எதிராக உறுதிமிக்க போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

ஏறத்தாழ ஈராண்டுகளுக்கு முன்பு மகாராஷ்டிரா - ரத்னகிரியில் செப்பு உருக்காலையை நிறுவ முயன்று, மக்களின் எதிர்ப்பால் விரட்டப்பட்ட ஸ்டெர்லைட் நிறுவனம், பாசிச ஜெயா கும்பலின் ஆதரவுடன் தூத்துக்குடியில் 1994-ஆம் ஆண்டு அக்டோபரில் இந்த ஆலையை நிறுவியது. அதன் கட்டுமானப் பணிகள் பெரும்பாலும் முடிவடைந்து இந்நிறுவனம் உற்பத்தியைத் துவக்க உள்ளது.

இந்த ஆலையிலிருந்து வெளியேறும் நச்சுக் கழிவுகளால் தூத்துக்குடி நகரமே மக்கள் வாழ லாயக்கற்றதாகிவிடும்; கழிவுகள் கடலில் சேர்வதால் மீன்கள் சாகும்; மீனவர்களின் வாழ்வே பறிபோகும். இதனால், இந்த நச்சு ஆலையை வெளியேற்றக்கோரி சுற்றுச் சூழல் இயக்கத்தினரும் உள்ளூர் மக்களும் ஸ்டெர்லைட் எதிர்ப்பியக்கம் அமைத்துப் போராடி வருகின்றனர். கடந்த மார்ச் 12-ஆம் தேதியன்று வெற்றிகரமான கடையடைப்புப் போராட்டத்தை நடத்தியதோடு, ஆலையின் கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்தக்கோரி சாலை மறியல் போராட்டத்தையும் நடத்தினர். அதன் பிறகு கடந்த மார்ச் 18-ம் தேதியன்று முதல்வர் ஜெயாவின் திடீர் சுற்றுப்பயணத்தின் போது 1000-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் திடீர் சாலை மறியலில் இறங்கி எதிர்ப்பு தெரிவித்தனர். பீதியடைந்த ஜெயா தூத்துக்குடிக்குச் செல்லாமல் நெல்லைக்கு ஓடினார்.

கடந்த 20-ம் தேதியன்று ஸ்டெர்லைட் நிறுவனத்துக்கான மூலப் பொருட்களை ஏற்றிக் கொண்டு மும்பையிலிருந்து தூத்துக்குடி துறைமுகத்துக்குக் கப்பல் வருவதாக செய்தியறிந்ததும், விவசாயிகளும் மீனவர்களும் படகுகளில் ஏறி, புதிய துறைமுக வாயிலருகே கப்பல் மறியலில் இறங்கினர். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல், படகிலேயே சமையல் செய்து சாப்பிட்ட அவர்களது போராட்டம் 15 மணி நேரத்திற்கும் மேல் நீடித்தது. தூத்துக்குடி துறைமுக வரலாற்றிலேயே முதன் முதலாக நடக்கும் மிகப் பெரிய கப்பல் மறியல் போராட்டம் இதுதான்!

ஸ்டெர்லைட் நிறுவனத்துக்கு மூலப் பொருட்களை ஏற்றிக் கொண்டு கப்பல் எதுவும் வரவில்லை என்றும், அப்படி கப்பல் வந்தாலும் அதைத் துறைமுகத்துக்குள் அனுமதிப்பதில்லை என்றும் மாவட்ட ஆட்சியாளர் உறுதியளித்த பின்னரே கப்பல் மறியல் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. மாநிலத்தைத் தொழில் மயமாக்குவது என்ற பெயரில் அந்நியக் கொள்ளைக்கும், நச்சுக் கழிவுகளால் மாநிலத்தையே நாசமாக்கவும் கிளம்பியுள்ள பாசிச ஜெயா கும்பலுக்குப் புரியும் மொழியில் போராட்டத்தை நடத்தியுள்ள மீனவர்கள், தமது அடுத்த கட்ட போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகிறார்கள்.

www.padippakam.com

## ஹவாலா இலஞ்ச வழக்கு:

# சி.பி.ஐ. மட்டுமல்ல நீதித்துறையும் அரசின் கைப்பாவையே

ஹவாலா விவகாரத்தில் பிரதமர் ராவ் உள்ளிட்டு அனைத்து ஓட்டுக் கட்சித் தலைவர்களும் சிக்கியுள்ள நிலையில், பிரதமரின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலிருந்து மத்தியப் புலனாய்வுத்துறையை விடுவித்தும், குற்றப் பத்திரிகையின் அடிப்படையில் அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் அண்மையில் உச்சநீதிமன்றம் சி.பி.ஐ-க்கு உத்தரவிட்டுள்ளது. ஜே.எஸ். வர்மா தலைமையிலான மூன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் "ஹவாலா விவகாரத்தில் சி.பி.ஐ.யானது அதன் எந்த அதிகார மட்டத்திலிருந்தும் வருகின்ற எந்தவொரு உத்தரவையும் ஏற்க வேண்டியதில்லை. குற்றம் சாட்டப்பட்ட எவருக்கும் - விசாரணையால் பாதிக்கப்பட்டவர்களோ, அல்லது தனிப்பட்ட ஆர்வம் கொண்டவர்களோ, எவருக்கும் விசாரணை விபரங்களைத் தெரிவிக்க வேண்டியதில்லை. உச்சநீதிமன்றத்திடம் தெரிவித்தால் போதுமானது" என்றும் இந்த உத்தரவில் கூறியுள்ளனர்.

ஹவாலா புள்ளியான எஸ்.கே. ஜெயின், பிரதமரிடம் 3.5 கோடி ரூபாய் கொடுத்ததாக வாக்குமூலம் அளித்ததை மேற்கோள் காட்டி பிரசாந்த் பூஷண், ராஜிந்தர் பூரி ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருந்தனர். பிரதமரும் ஹவாலா விவகாரத்தில் சிக்கியுள்ளதால், அவரது கட்டுப்பாட்டிலிருந்து சி.பி.ஐ.யை விடுவித்து விசாரணை செய்யக் கோரியிருந்தனர். இம்மனுவை விசாரித்த ஜே.எஸ். வர்மா தலைமையிலான உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழுதான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.



**நீதித்துறையை வாய்கிழியப் புகழும் எதிர்க்கட்சிகள்**

"எதிர்த் தரப்பினரைப் பழிவாங்கி, தன்னை திருவாளர் பரிசுத்தமாக காட்டிக் கொள்ளும் நோக்கத்தோடு ஹவாலா பூதத்தை ஏவிய ராவ், அது தனக்கு எதிராகத் திரும்பியதும், சி.பி.ஐ.யின் விசாரணையை முடக்கி வைக்க முயற்சித்தார். உச்சநீதிமன்ற உத்திரவானது, இந்த முட்டுக் கட்டையை நீக்கி விட்டது. இனி சி.பி.ஐ. சுதந்திரமாகச் செயல்படும். பிரதமர் ராவையும் விசாரணை செய்யும்" என்று எதிர்க்கட்சிகள் ஆரவாரம் செய்கின்றன.

"சி.பி.ஐ.யின் சுதந்திரமான செயல்பாட்டுக்கு இது உரமூட்டும்" என்கிறார் வலது கம்யூனிஸ்ட் தலைவரான இந்திரஜித் குப்தா. "இது பாராட்டத்தக்க முக்கியமான தீர்ப்பு. நேர்மையான விசாரணைக்கு இது வழிவகுக்கும். சி.பி.ஐ.-க்கு நிர்வாகத் தலைவராக இனிமேலும் பிரதமர் நீடிப்பது சரியல்ல" என்கிறார் பாரதீய ஜனதா தலைவர்களில் ஒருவரான சிக்கந்தர் பக்த். "சி.பி.ஐ. ஒரு சுதந்திர அமைப்பாகச் செயல்பட வேண்டும் என்பதை இத்தீர்ப்பு உறுதிப்படுத்தியுள்ளது" என்கிறார் 'மார்க்சிஸ்ட்' கட்சி அரசியல் தலைமைக் குழு உறுப்பினரான பிரகாஷ்கரத். "சிக்கலானதொரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நீதித்துறை இவ்வாறு தலையிட்டு உத்திரவிடுவது அவசியமானதுதான். ஹவாலா விவகாரத்தில் பிரதமரே சிக்கியுள்ளதால், சி.பி.ஐ.யின் நிர்வாகத் தலைமைப் பொறுப்பிலிருந்து அவர் விலக வேண்டும்" என்கிறார் சமதா கட்சித் தலைவர்களில் ஒருவரான சையத் சகாபுதீன். பத்திரிகைகளோ இதை நீதித்துறையின் செயலூக்கத் தன்மை என்று புகழாரம் சூட்டுகின்றன.

"பிரதமரின் கட்டுப்பாட்டின் கீழ், அவரது உத்திரவின்படி சி.பி.ஐ. செயல்படுவதா? வேண்டாமா? என்பது நிர்வாகத்துறை சம்பந்தப்பட்ட விவகாரமாகும்; அதில் நீதித்துறை தலையிடுவதும் உத்திரவிடுவதும் வரம்பு மீறிய செயலாகும்" என்று சில சட்ட வல்லுனர்களும் முன்னாள் நீதிபதிகளும் வாதிடுகின்றனர். "இல்லை; குறிப்பிட்ட சிக்கலான சூழ்நிலையில் நீதித்துறை இவ்வாறு தலையிடுவது சரியானதுதான்" என்று வேறு சில சட்ட வல்லுனர்கள் வாதிடுகின்றனர்.

**நீதித்துறையின் தலையீடும் சி.பி.ஐ. விசாரணையும் புதிய போக்காகி விட்டது**

தற்போதைய ஹவாலா விசாரணையை ஒட்டிய உத்திரவு மட்டுமல்ல; அண்மைக் காலமாக நீதித்துறையானது, பல்வேறு நிர்வாக விவகாரங்களில் தலையிட்டு உத்திரவிடுவது அதிகரித்து வருகிறது. பஞ்சாப் போலீசு தலைமை அதிகாரியான கே.பி.எஸ்.கில், ரூபன் தியோல் என்ற பெண் அதிகாரியிடம் குடிபோதையில் தகாத முறையில் நடந்து கொண்ட விவகாரம், காவிரி நீர் பிரச்சினை, தாஜ்மஹால் ஆலைப் புகையால் மாசு படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கக் கோரும் உத்தரவு, டெல்லியில் அரசு வீடுகளை ஒதுக்கீடு செய்வதில் நடந்துள்ள முறைகேடுகளை விசாரிக்கக் கோரும் உத்தரவு என்று நீதித்துறையானது நிர்வாகத்துறையின் விவகாரங்களில் குறுக்கிட்டு உத்திரவிட்டு வருகிறது.

இவை மட்டுமல்ல, எதற்கெடுத்தாலும் சி.பி.ஐ.யின் விசாரணை நடத்துமாறும், நீதித்துறையானது சி.பி.ஐ. விசாரணையைப் பரிந்துரைப்பதும் அண்மைக் காலமாக பெருகி வருகிறது. தமிழ்நாடு வேட்டி - சேலை ஊழல், பீகார் கால்நடை ஊழல், உத்திரகாண்ட் விவகாரம், பம்பாய் குண்டு வெடிப்பு விசாரணை என அது தொடர்கிறது. சி.பி.ஐ.யிடம் ஒப்படைப்பதன் மூலம் நேர்மையான விசாரணை நடக்கும் என்ற தோற்றத்தை அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள் மட்டுமின்றி நீதித்துறையினரும் திட்டமிட்டே உருவாக்குகின்றனர்.

"ஒரு நகராட்சி ஆணையரின், போலீசு ஆய்வாளரின் அல்லது வருமான வரித்துறை அமலாக்கப் பிரிவு அதிகாரியின் வேலையை நீதித்துறை மேற்கொள்வதும், உத்திரவிடுவதும் சரியானதல்ல; ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் தூண்களான நிர்வாகத்துறை, நீதித்துறை, மக்கள் பிரதிநிதிகள் அவைகள், பத்திரிகை - ஆகிய அனைத்தும் சமமான அந்தஸ்து கொண்டவை. ஒன்றுக்கொன்று இசைவானவை. ஒன்றின் விவகாரங்களில் மற்றது குறுக்கிடுவதும், ஒன்று மற்றதன் கடமைகளை மேற்கொள்வதும் விபரீத விளைவுகளையே ஏற்படுத்தும் என்று


படிப்பகம்

www.padippakam.com

பிரபல சட்ட வல்லுனரான பல்கிவாலா, முன்னாள் பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதியான லெண்டின் முதலானோர் வாதிடுகின்றனர்.

**சட்ட வல்லுனர்களின் வாதப் பிரதிவாதங்கள்**


இந்த உச்சநீதிமன்ற உத்திரவு சட்ட வல்லுனர்கள் மற்றும் முன்னாள் நீதிபதிகள் மத்தியில் காரசாரமான வாதப் பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. பம்பாய் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியான லெண்டின், ''உலகின் எந்தவொரு ஜனநாயகமும் நாட்டை நிர்வகிக்க நீதித்துறைதான் சரியானது என்று எங்கேயும் எப்போதும் கூறுவதில்லை. நீதித்துறை என்பது சட்டத்தைக் காத்து நெறிப்படுத்தும் ஒரு உயர்மட்ட அமைப்புதான். அது அரசாங்கத்தின் நிர்வாகத் துறையில் தலையிடுவதும் உத்திரவிடுவதும் தேவையற்றது. அண்மைக் காலமாக 'நீதித்துறையின் செயலூக்கத்தன்மை' புதிய பேஷனாகி விட்டது. ஆனால் இது ஆரோக்கியமானதல்ல'' என்று இந்த உத்திரவைச் சாடுகிறார். ''அரசாங்கத்துக்கே உத்திரவிடும் சூப்பர் அரசாங்கமாக நீதித்துறை மாறிவிட்டால், அப்புறம் நீதித்துறையின் பணிகளை யார் செய்வார்கள்? ஏற்கனவே பல வழக்குகள் ஆண்டுக் கணக்கில் விசாரிக்கப்படாமல் உள்ள நிலையில், இனி எந்தவொரு வழக்கும் 20 ஆண்டுகளுக்குப் பிறகுதான் விசாரணைக்கு வரும் என்ற நிலை ஏற்படும். இதனால் கடுமையான விளைவுகள் ஏற்படும்'' என்கிறார் பிரபல சட்ட வல்லுனரான பல்கிவாலா.

''நீதிமன்றம் அரசாங்கத்தின் வேலையை எடுத்துக் கொள்ளக் கூடாது; இப்படி வரம்பு மீறிச் செயல்படுவது சட்ட விரோதமானது'' என்கிறார் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியான வெங்கட் ராமையா. பம்பாய் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியான தாவூத், ''பல வழக்குகள் ஆண்டுக் கணக்கில் விசாரிக்கப்படாமல் உள்ள போது, நீதித்துறையானது அவசரமாக இப்படியொரு வழக்கில் தலையிடுவது தேவையற்றது. நிர்வாகத்துறையின் பணிகளில் நீதித்துறை தலையிடுவதும், உத்திரவிடுவதும் சட்டத்திற்கே எதிரானது'' என்கிறார்.

''இது சட்டத்திற்கு எதிரானதல்ல; சட்டத்தின்படி நிர்வாகத்துறை செயல்பட வலியுறுத்தும் ஒரு உத்திரவுதான் இது. இனி சி.பி.ஐ. ஒரு சுயேட்சையான அமைப்பாகச் செயல்படும் நிலைமை உருவாகும்'' என்று எதிர்வாதம் செய்கிறார் சட்ட வல்லுனரான ராஜீவ் தாவண். ''சிக்கலான சூழ்நிலையில் வழங்கப்பட்ட குறிப்பிட்ட ஒரு தீர்ப்புதான் இது. எல்லா விவகாரங்களிலும் நீதித்துறை தலையிடுவதாக குற்றம் சாட்டுவது சரியல்ல'' என்கிறார் சோலிசோரப்ஜி.

**இந்திய நீதித்துறை யோக்கியமானதா?**

நிர்வாகத்துறையில் நீதித்துறை தலையிடலாமா, கூடாதா என்கிற வாதப் பிரதிவாதங்கள் ஒருபுறம் இருக்கட்டும். நாட்டின் ஒருமித்த அரசியல் அமைப்பே ஊழல் - மோசடி, கிரிமினல் மயமாகி விட்ட நிலையில், நீதித்துறை மட்டும் இவற்றுக்கு அப்பாற்பட்டதா? ஊழல் கறைபடியாத புனிதமான அமைப்பா? எந்தவொரு குடிமகனையும் பாரபட்சமின்றி நடத்தும் நடுநிலையான துறையா? நிர்வாகத்துறையில் தலையிட்டு உத்திரவிடும் அளவுக்கு அதற்கு ஏதாவது அருகதை இருக்கிறதா? இல்லை; இந்திய நீதித்துறையானது பிற்போக்கானது; அநீதியானது; ஊழல் - மோசடிகளில் சிக்கி கறைபடிந்த அமைப்புதான்! நாட்டின் ஒட்டு மொத்த அரசியல் அமைப்பே ஊழல் கிரிமினல்மயமாகி புழுத்து நாறும் போது அரசு எந்திரத்தின் ஒரு அங்கமாக உள்ள நீதித்துறை மட்டும் புனிதமாக இருக்கத்தான் முடியுமா?



உதாரணத்துக்கு, நாம் அன்றாடம் சந்திக்கும் விவகாரத்தையே எடுத்துக் கொள்வோம். ஒரு சாதாரண திருட்டு வழக்கில் சந்தேகத்தின் பேரில் ஒரு பாமர மனிதன் போலீசாரால் கைது செய்யப்படுகிறான். விசாரணை என்ற பெயரில் அவனை மிருகத்தனமாக சித்திரவதை செய்து, போலீசார் அவனை நீதிமன்றத்தில் நிறுத்துகின்றனர். கோர்ட்டு, அவன் பிணையில் வெளிவருவதற்கான கட்டணத் தொகையை அறிவித்து, அடுத்த விசாரணை தேதியை அறிவிக்கிறது.

பாமர மனிதனால் அந்தப் பிணைத் தொகையைச் செலுத்த இயலாது. அவன் சிறைக்கு அனுப்பப்படுகிறான். அவன் குற்றமற்றவனாக இருந்தாலும் அடுத்த விசாரணை வரை சிறையில் வாடத் தான் வேண்டும். விசாரணை தள்ளிப் போடப்பட்டால் அவன் காலவரையறையின்றி சிறையில் தான் கிடக்க வேண்டும். இப்படி நாடெங்கும் ஆயிரக்கணக்கான விசாரணைக் கைதிகள் ஆண்டுக் கணக்கில் சிறையில் அவதிப்படுகின்றனர். நீதிபதிகளுக்கும் இந்த நிலைமை தெரிந்ததே தான் உள்ளது.

அதே சமயம், ஒரு அரசியல்வாதி - முக்கிய பிரமுகர் என்றால் நீதித்துறை வளைந்து கொடுக்கிறது. குற்றம் சாட்டப்பட்ட அரசியல்வாதிக்கு உடனே பிணையில் செல்ல வசதியளிக்கிறது. ஏனெனில், அவர் சிறையிலடைக்கப்பட்டால் அது நீதியைச் செயலிழக்கச் செய்து விடுமாம். அந்த ஓட்டுப் பொறுக்கியின் ஆதரவாளர்கள் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தி விடுவார்களாம்!

1984-ல் டெல்லியில் பாசிச இந்திரா சாவையொட்டி சீக்கியர்களை நரவேட்டையாடிய கலவரத்திற்கு தலைமையேற்று வழிநடத்தினர், மத்திய மந்திரியான எச்.கே.எல். பகத். ஏறத்தாழ 5000-க்கும் மேற்பட்ட அப்பாவி சீக்கியர்கள் காங்கிரசு குண்டர்களால் படுகொலை செய்யப்பட்ட போதிலும், ஒரு குற்றவாளி கூட இன்று வரை கோர்ட்டில் நிறுத்தப்படவில்லை. ஒரு வழக்கு கூட போலீசாரால் பதிவு செய்யப்படவில்லை. குண்டர் படைத் தளபதியான பகத், அமைச்சர் பதவியைப் பரிசாகப் பெற்று, சுதந்திரமாகத் திரிந்தார்.

13 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அவரைக் குற்றம் சாட்டி கைது செய்தவுடன், நீதிமன்றத்தில் பகத் ஆதரவாளர்கள் கோஷம் போடுகின்றனர். தமிழகத்து ஆதிராஜாராம் பாணியில் அவர் சிறையிடப்படாமல் ஐந்து நட்சத்திர மருத்துவமனையில் சுகமாக படுத்துக் கொண்டிருக்கிறார்.

இதேபோல, ஹவாலா ஊழலில் சிக்கிய பாரதீய ஜனதா தலைவரான அத்வானியைக் கைது செய்தால், ''உள்நாட்டு யுத்தம் வெடிக்கும்'' என்று மிரட்டுகிறார் சிவசேனா தலைவரான பால்தாக்கரே. அதாவது, அத்வானியைக் கைது செய்தால், முஸ்லீம்கள் மீது கொலை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விடுவேன் என்று பகிரங்கமாகவே சவால் விடுக்கிறார். இனவெறி பயங்கரவாதி பால்தாக்கரேயை மட்டுமல்ல; அத்வானியையும் கைது செய்யவோ, சிறையில் அடைக்கவோ நீதிமன்றம் அஞ்சுகிறது. ஏனெனில் நாட்டில் சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டு விடுமாம்! ஹவாலா மோசடியில் கோடி கோடியாய் கொள்ளையடித்த அனைத்து அரசியல்வாதிகளையும் சிறையிலடைக்காமல்


படிப்பகம்

www.padippakam.com

பிணையில் செல்ல சிறப்பு நீதிமன்றமே உத்திரவிட்டுள்ளது.

இதுதான் இந்திய நீதித்துறையின் லட்சணம்! இந்நிலையில், "குற்றம் சாட்டப்பட்ட குடிமகன் எப்படிப்பட்டவனாக - எத்தகைய உயர் தகுதியில் இருந்தாலும் சட்டம் தனது கடமையைச் செய்யும்" என்று நீதிபதிகள் உபதேசிப்பதில் ஏதாவது பொருள் இருக்கிறதா?

**நீதித்துறையின் அயோக்கியத்தனங்கள்**

ஊழல் - மோசடிகளுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளதாகச் சித்தரிக்கப்படும் நீதித்துறை, வரலாறு காணாத தொலைத் தொடர்பு ஊழல் - மோசடி விவகாரத்தில், எந்த மோசடியும் நடக்கவில்லை என்று அண்மையில் தீர்ப்பளித்துள்ளதே - இதுதான் நீதித்துறையின் செயலூக்கமா?

ஈராண்டுகளுக்கு முன்பு அயோத்தி விவகாரத்தில், இந்து வெறியர்களுக்குச் சாதகமாக மூன்று தீர்ப்புகளை உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளதே; இதுதான் இந்திய நீதித்துறையின் மதச்சார்பின்மையா? நடுநிலைமையா?

பல்லாண்டுகளாக தமிழகத்தில் தடை செய்யப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குதிரைப் பந்தய சூதாட்டத்தை மீண்டும் தொடர அண்மையில் நீதித்துறை தீர்ப்பளித்துள்ளதே; இது ஒரு சூதாட்டமே அல்ல என்று வேறு நியாயப்படுத்துகிறதே; - இது தான் சமுதாயத்தில் ஒழுக்கத்தையும் தூய்மையையும் நிலை நாட்டும் செயலா?

காலனிய கால ரௌலட் சட்டத்தை விட மிகக் கொடிய பாசிச சட்டமான பயங்கரவாத "தடா" சட்டம், அரசியல் சாசனப்படி செல்லத்தக்கது தான் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஈராண்டுகளுக்கு முன்பு தீர்ப்பளித்தனரே; இதுதான் நீதித்துறையின் நடுநிலை - ஜனநாயகத்தன்மையா?

1978-ஆம் ஆண்டில் கர்நாடகத்தில் ஒரு இளம் பெண் காமுகர்களால் பாலியல் வன்முறைக்கு ஆளான வழக்கில், "தெரிந்தோ, தெரியாமலோ அந்தப் பெண் காம இச்சையைத் தூண்டியுள்ளார்" என்று 15 ஆண்டுகளுக்குப் பிறகு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து, காமுகர்களை விடுதலை செய்ததே; இதுதான் இந்திய நீதித்துறையின் முற்போக்குத் தன்மையா?

அவசரநிலை பாசிச ஆட்சிக் காலத்தில், நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தின் ஆதரவாளரான கள்ளிக்கோட்டை பொறியியற் கல்லூரி மாணவரான ராஜன், போலீசாரால் மிருகத்தனமாக சித்திரவதை செய்து கொல்லப்பட்ட வழக்கில், 16 ஆண்டுகால விசாரணைக்குப் பிறகு, கொலைகார போலீசுக்குச் சாதகமாக உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதே, - இதுதான் நீதித்துறையின் நியாயமா?

போபாலில் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் நச்சு வாயுவால் மடியவும், தலைமுறை தலைமுறையாக ஊனமுறவும் காரணமான யூனியன் கார்பைடு கொலைகாரர்கள் மீது கிரிமினல் வழக்கு போட முடியாமல் தடுக்கவும், பாதுகாப்பாக அவர்கள் தப்பிச் செல்லவும் உடந்தையாக உச்சநீதிமன்றம் செயல்பட்டதே; - இதுதான் நீதித்துறையின் நேர்மையா?

பாசிச இந்திராவின் தேர்தல் வழக்கில், அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு இடைக்கால தடை விதித்தும், பிறகு வழக்குகளையே தள்ளுபடி செய்தும், பாசிச ஆட்சியைக் கொண்டு வர உச்சநீதிமன்றம் உறுதுணையாக நின்றதே; "மிசா" சட்டத்தின் கீழ் விசாரணையின்றி எவரையும் சிறையிலடைக்கவும் சுட்டுக் கொல்லவும் அரசுக்கு உரிமை உண்டு என்று தீர்ப்பளித்ததே; - இதுதான் நீதித்துறையின் ஜனநாயகத் தன்மையா?

- இப்படி கணக்கற்ற விவகாரங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். கடந்தகால விவகாரங்கள் மட்டுமல்ல; தற்போது ஹவாலா விசாரணையில் உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு கூட மோசடியானது தான்!



ஏஜமானின் சேவையில் சி.பி.ஐ.

**உச்சநீதி மன்றத்தின் மோசடி உத்திரவு**

சி.பி.ஐ.யானது பிரதமரின் நிர்வாக அதிகாரத்திற்குட்பட்டது. அவரிடமிருந்து உத்திரவுகளைப் பெற்று செயல்படக் கூடியது. இந்நிலையில் பிரதமரின் உத்திரவை ஏற்று சி.பி.ஐ. செயல்பட வேண்டியதில்லை என்று உச்சநீதிமன்றம் உத்திரவிடவில்லை. துறைசார்ந்த எந்த அதிகாரமட்டத்திடமிருந்தும் உத்திரவைப் பெற்று செயல்பட வேண்டியதில்லை என்றுதான் கூறுகிறது. சி.பி.ஐ.யின் நிர்வாக அதிகாரம் என்றால் யார் என்பதுதான் கேள்வி. அது சி.பி.ஐ.யின் இயக்குனரா? நிர்வாகத் தலைவரான பிரதமரா? பிரதமர் அலுவலக அதிகாரிகளா? என்று குறிப்பாக எதையும் கூறவில்லை. ஹவாலா விவகாரத்தில் பிரதமரே சிக்கியுள்ள நிலையில், இப்படி அருபமாக உத்திரவிடுவதுதான் நீதித்துறையின் செயலூக்கத் தன்மையா?

அரசியல்வாதிகள் மீதும் அரசாங்கத்தின் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்ட நிலையில், சி.பி.ஐ. சுயேட்சையாக இயங்குவதாகக் காட்டி, அதன் நம்பகத்தன்மையை நிலைநாட்டும் நோக்கத்தோடுதான் ராவ்கும்பல் காய்களை நகர்த்துகிறது. இதற்கு இசைவான வகையிலேதான் நீதிமன்ற உத்தரவும் அமைந்துள்ளது.

"சட்டம் தன் கடமையைச் செய்யும் சி.பி.ஐ. விசாரணையில் பிரதமரோ, அமைச்சர்களோ தலையிட மாட்டார்கள். எத்தகைய உயர் பதவியில் இருந்தாலும் யாரையும் காப்பாற்ற முயற்சிக்க மாட்டோம்" என்று ராவ் கும்பல் பரிசுத்த நாடகமாடுகிறது. அதையே தான் நீதிமன்ற உத்திரவும் கூறுகிறது. அதே சமயம் பிரதமருக்கு ஹவாலா புள்ளியான ஜெயின், மூன்றரை கோடி ரூபாய் கொடுத்தது பற்றி அது வாயே திறக்கவில்லை.

இதுவொருபுறம் இருக்கட்டும். நீதித்துறையின் செயலூக்கம் பற்றி வாய்கிழியப் புகழும் எதிர்க்கட்சிகள், தங்களைப் பற்றி நீதித்துறை விமர்சித்ததும் வரிந்து கட்டிக் கொண்டு நீதித்துறையைச் சாடி கண்டித்தனர். அண்மையில் நீதிபதி டிங்கரா, ஊழல் அரசியல்வாதிகளையும் நாடாளுமன்றத்தையும் சாடிப் பேசியவுடன், "இப்படி விமர்சிப்பது நீதிபதியின் வேலையல்ல; இன்றைய அரசியலமைப்பின் முக்கியத் தூணாகிய நாடாளுமன்றத்தை விமர்சிப்பது கண்டனத்துக்குரியது" என்று எல்லா ஓட்டுக் கட்சிகளும் ஒரே குரலில் எதிர்ப்பு தெரிவித்து, டெல்லி உயர்நீதிமன்றத்தின் மூலம் அந்த நீதிபதியைச் சாடினர். இதுதான் நீதித்துறையின் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகக் கூறும் ஓட்டுக் கட்சிகளின் யோக்கியதை!

"நீதித்துறையானது, எங்களைப் பற்றி விமர்சித்தால் எதிர்ப்போம்; ஆளுங்கட்சியை விமர்சித்தால் சாதகமாக்கிக் கொள்வோம்; ஓட்டு மொத்த அரசியலமைப்பு முறையின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்ட நிலையில், நீதித்துறையைப் புனிதமானதாகக் காட்டி மக்களுக்கு நம்பிக்கையூட்ட நாடகமாடுவோம்" - என்பது தான் ஓட்டுக் கட்சிகளிடையே நிலவும் எழுதப்படாத ஒப்பந்தமாக உள்ளது. எனவே ஹவாலா விவகாரத்தில் நீதித்துறையின் உத்திரவைக் கண்டு அதன் மீது நம்பிக்கை வைக்க அடிப்படையே இல்லை. 'நீதித்துறையின் செயலூக்கத் தன்மை'யைக் காட்டி இன்றைய அரசியலமைப்பு முறையின் மீது நம்பிக்கை ஏற்படுத்தச் செய்யும் முயற்சிகளுக்கு உழைக்கும் மக்கள் துணைபோகவும் தேவையில்லை.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# புதிய பொருளாதாரக் கொள்கை படுதோல்வி 2

புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் கட்டுமானச் சீரமைப்பினால் நாடு நாலுகால் பாய்ச்சலில் முன்னேறும் என்று வாதிட்டவர்கள், பின்வருமாறு விளக்கமளித்தனர்.

''நாட்டின் தொழில்வளம் பெருக வேண்டுமானால் சாலை, ரயில், விமான மற்றும் நீர்வழிப் போக்குவரத்துக்கான வசதி பெருக வேண்டும். தொலைத் தொடர்பு தகவல் வலைப்பின்னல்களை நிறுவ வேண்டும். தடையின்றியும் போதிய அளவும் மின்சக்தி, எரிபொருள் கிடைக்க வேண்டும். இவையெல்லாம் தொழில் முன்னேற்றத்துக்கான அடிப்படைக் கட்டுமானத் தேவைகள். இவற்றை நாமே கட்டியெழுப்புவதற்கான நிதி வசதியும் நவீனத் தொழில் நுட்பமும் நம்மிடம் இல்லை. இந்தத்துறைகளில் அந்நியத் தொழில் கழகங்கள் முதலீடு செய்ய அனுமதிப்பதன் மூலம் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். அடிப்படைத் தொழில்க்ளான இரும்பு - எஃகு, சிமெண்டு ஆலைகள், நிலக்கரி மற்றும் உலோகச் சுரங்கத் தொழில்களும் அந்நிய நிறுவனங்களை அனுமதிப்பதன் மூலம் மேலும் முன்னேற்றம் ஏற்படும். இந்தத் துறைகள் அனைத்தையும் திறந்து விடுவதன் மூலம் சர்வதேசப் போட்டியில் சாதகமான ஒப்பந்தங்கள் போடலாம். இந்தத் துறைகளில் இந்தியக் கம்பெனிகளே இருந்தாலும் சர்வதேசப் போட்டியில் இறங்கும் போது இவையும் அந்தத் தரத்துக்கு உயர வேண்டிய நிர்பந்தம் ஏற்படும்''.

கடந்த ஐந்தாண்டுகளாக நரசிம்மராவ் - மன்மோகன்சிங் கும்பல் மேற்கொண்ட நடவடிக்கைகள் அது எதிர்பார்த்த இந்தப் பலன்களை அடைந்ததா? இல்லை; இதெல்லாம் படுதோல்வியடைந்துவிட்டன; அது இப்படித்தான் முடியும் என்பது அக்கும்பலுக்குத் தெரியும்.

தொழில் முன்னேற்றத்துக்காக கச்சாப் பொருட்கள் கிடைக்கும் இடங்களையும் ஆலைகளையும் இணைப்பதற்கு சாலை முதலிய போக்குவரத்துகள் அவசியம்தான். அதேபோல உற்பத்திப் பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு போகவும் அவை அவசிய:ம்தான். ஆனால் தரைவழிப் போக்குவரத்துக்கான, ரயில் பாதை அமைப்புக்கான கட்டுமானப்பணிகள் எதிலுமே அந்நியத் தொழில் கழகங்கள் முதலீடு செய்யவே இல்லை. உலக வங்கி, ஐ.எம்.எஃப், ஆசிய வங்கி போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் வட்டிக்குக் கடன் கொடுத்துவிட்டு, தாமே திட்டங்களை அங்கீகரிக்கவும் மேற்பார்வையிடவும் உரிமை பெற்றன.

இப்பொழுது நாடு முழுவதும் உள்ள பெருநகரங்களுக்கிடையிலும் அவற்றுக்கும் தொழிற்சாலைகள் நிறுவப்படும் பகுதிகளுக்கும் இடையே உள்ள சாலைகள் அகலப்படுத்தப்படுகின்றன. 8 அல்லது 16 சக்கர மற்றும் அதற்கும் மேலான கனரக வாகனங்கள் செல்லும் அளவுக்கு பழைய சாலைகள் திருத்தியமைக்கப்படுகின்றன. என்ரான் அனல் மின் நிலையம் அமையவுள்ள தாபோல் கிராமத்துக்கு மலைகளைக் கடக்கும் இருவழிப்பாதை அமைத்துத் தரப்படுகிறது. இதைப்போல சென்னையிலிருந்து தூத்துக்குடி - கன்னியாகுமரி வரை சுற்றுச்சூழலை நாசப்படுத்துவதையும் பாராது கடற்கரைச்சாலை அமைக்கப்படுகிறது. பெருநகரங்களுக்கிடையே நான்கு வழி துரித வேகச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. (மீட்டர் கேஜ்) குறுகிய இரயில் பாதைகள் அகலப்படுத்தப்பட்டு ஒரே அளவான அகன்ற இரயில் பாதைகளாக்கப்படுவதோடு பல புதிய பாதைகளும் அமைக்கப்படுகின்றன. சரக்குப் போக்குவரத்துக்கு இரயில் பாதைகளின் அவசியம் காரணமாக எல்லா முக்கிய வழித்தடங்களும் மின்சாரமயமாக்கப்படுகிறது. இந்தக் கட்டுமானப் பணிகளுக்கெல்லாம் அந்நியக் கம்பெனிகள் மட்டுமல்ல, இந்தியத் தனியார் துறையினரும் மூலதனமிடும் படி செய்வதில் நரசிம்மராவ் - மன்மோகன் சிங் கும்பல் தோல்வி கண்டுவிட்டது. ஏகாதிபத்தியக் கந்துவட்டி நிறுவனங்களான உலக வங்கி - ஐ.எம்.எஃப். பிடம் கடன் வாங்கி, அரசுதான் மேற்கண்ட கட்டுமானப் பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

ஆனால், அதேசமயம், இப்படிச் சாலைப் போக்குவரத்து முன்னேற்றத்தின் மறைமுகப்பலன்களை மட்டுமல்ல, நேரடிப் பலன்களை அறுவடை செய்து கொள்ள தேசங் கடந்த தொழில் கழகங்கள் போட்டு போட்டுக் கொண்டு ஓடோடி வருகின்றன. அதிலும் முதலில் தயார் நிலை சந்தையையும், இறக்குமதி தாராளமயமாக்குதலைப் பயன்படுத்திக் கொண்டும் தைஹாட்சு, ஓபல், டயோட்டா, ஹோண்டா, ஃபோர்டு, தீவூ, ஃபியட், பியூக்கோ, கிரிஸ்லர், சாம்சுன், மிட்சுபிஷி போன்ற அதி ஆடம்பர சொகுசுக் கார்கள் ஏராளமாக கொண்டு வந்து குவிக்கப்பட்டன. இந்த வகையில் ஒரு சுற்று இந்தியச் சந்தையைச் சூறையாடும் போதே இங்குள்ள தரகு முதலாளிகளுடன் சேர்ந்து இந்தியாவிலேயே கார்கள் தயாரிக்கும் ஆலைகள் துவங்க ஒப்பந்தங்கள் போட்டுள்ளனர்.

அடிப்படைக் கட்டுமானப் பணிகளில் மூலதனமிடுவதற்கு மாறாக தயார் நிலை சந்தையை சூறையாடும் இதே போக்கு இரயில் துறையிலும் நடக்கிறது. இந்திய அரசுக்குச் சொந்தமான ஆலைகளில் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார முறையில் சிறந்த மின்சார இரயில் எஞ்சின்கள் தயாரிக்க முடியும்; குறிப்பாக அரசுக்குச் சொந்தமான சித்ரஞ்சன், கபூர்தலா இரயில் என்ஜின் ஆலைகளும், இந்திய மிகுமின் நிறுவனமும் தரமான, நவீன, மலிவான என்ஜின்களை வழங்கக் கூடிய திறம் வாய்ந்தவை. இருந்த போதும் இவற்றை ஒதுக்கிவிட்டு சுவிசு நாட்டு ஏ.பி.பி. கம்பெனியிடம் இருந்து இரயில் என்ஜின்கள் வாங்கப்பட்டன. இதுவும் கூட அவர்களின் இறக்குமதி தாராளமய கொள்கைப்படிதான் என்று விட்டுவிடலாம். ஆனால் சர்வதேசப் போட்டியில்தானே தரமான, நவீன, மலிவானவை எவை என்று தெரிந்தெடுத்து வாங்கியிருக்க வேண்டும். ஆனால் நடந்ததோ, திரைமறைவு பேரம். இலஞ்சமும், தரகுத் தொகையும் எவ்வளவோ அதைப். பொருத்து தரமும், தொழில்நுட்பமும் நிர்ணயிக்கப்பட்டது. சில ஆண்டுகளிலேயே ''காய்லாங்'' கடைக்குப் போகும் சரக்குதான் இறக்குமதி செய்யப்படுகிறது. இதற்கே குற்றமயமான சர்வதேச தரகுக் கும்பல்கள் மூலமே காரியங்கள் முடிக்கப்படுகின்றன.

விமான நிலையங்களையும், துறைமுகங்களையும் நவீனப்படுத்துவது, விரிவுபடுத்துவது போன்ற கட்டுமானப் பணிகளிலும் தேசங்கடந்த தொழில்கழகங்களோ, அந்நிய முதலீடுகளோ வரவில்லை. ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களிடம் இருந்து கடும் வட்டிக்கு கடன் வாங்கி அரசு நிறுவனங்கள் தாம் இன்னமும் இப்பணிகளைச் செய்கின்றன. பம்பாய் விமான நிலையக் கட்டுமானப் பணியை மட்டும் தரகு முதலாளி இந்துஜா நிறுவனத்திற்கு ஒப்பந்த ஒதுக்கீடு செய்ததிலும் பல கோடி ரூபாய் இலஞ்சம் புகுந்து விளையாடியிருக்கிறது.

கட்டுமானப் பணியில் மட்டுமல்ல



படிப்பகம்

www.padippakam.com

உள்நாட்டு விமானப் போக்குவரத்திலும் அந்நிய ஏகபோகங்கள் பெரும் அக்கறை காட்டவில்லை. இந்தியத் தரகு முதலாளிகளில் சிலரும், தாவூத் இப்ராகீம் போன்ற சர்வதேச குற்றக் கும்பல்களின் பினாமிகள் சிலரும்தான் உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் இறங்கியுள்ளனர். மோடி - லூஃப்ட், ஈஸ்ட் - வெஸ்ட் ஏர் லைன்ஸ், சகாரா ஏர்லைன்ஸ், என்.ஈ.பி.சி. போன்றவை இப்படிப்பட்டவை தாம். ஆனால் ஏற்கனவே உள்ள இந்தியன் ஏர்லைன்ஸ், வாயு தூத் ஆகியவற்றோடு போட்டி போட்டு விமான சேவையை விரிவுபடுத்துவது, நவீனப்படுத்துவது, தரத்தை உயர்த்துவது என்ற நோக்கம் நிறைவேறவே இல்லை. தனியார் விமானக் கம்பெனிகள் அனுபவம், திறமை வாய்ந்த நிர்வாகிகள், விமானிகள் மற்றும் பிற ஊழியர்களுக்கு மிகக் கூடுதலான ஊதியம் கொடுத்து ஈர்த்து விட்டன. அரசுத்துறை விமானச் சேவைகளோ, உள்ளிருந்து சதி செய்து அதீதமான கட்டண உயர்வு, ஊழியர்களின் கோரிக்கைகளை முற்றாக நிராகரிப்பதால் எழும் தொழில் தகராறு, நிர்வாக திறமையின்மை போன்றவற்றால் முடக்கப்பட்டன. இப்போது தனியார் ஏகபோக ஆதிக்கம் ஏறக்குறைய முழுமையாகி, விமான சேவைத் துறையில் புகுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் நோக்கத்தை தோல்வியுறச் செய்துவிட்டது.


நாட்டிலுள்ள பதினொரு பெரும் துறைமுகங்களுக்கும் தொழிற்சாலைகள் சார்ந்த சிறியவைகளுக்கும் கட்டுமான, விரிவாக்க, நவீனமயமாக்க மொத்தம் 14,000 கோடி ரூபாய் தேவையென அரசு திட்டமிட்டது. இதில் ஒரு சதவீத அளவு கூட தனியாரிடமிருந்து முதலீடு செய்யப்படவில்லை. இதனால் குஜராத் மற்றும் மராட்டிய அரசுகள் ஒரு புதிய திட்டத்தை அமலாக்குவதற்குத் துவங்கி விட்டன. கடற்கரையோரங்களில் தொழிற்சாலைகளை நிறுவும் கம்பெனிகளுக்கே துறைமுக வசதியுள்ள நிலங்களைக் குத்தகைக்கு விட்டுவிடுவது; அக்கம்பெனிகளே துறைமுகங்களைக் கட்டி ஒரு 30, 40 ஆண்டுகளுக்குச் சொந்தமாக வைத்துக் கொண்டு எவ்வளவு வேண்டுமானாலும் நுழைவு வரி வசூலித்துக் கொள்ளலாம்; பிறகு அரசு எடுத்துக் கொள்ளும் அல்லது குத்தகை நீட்டிக்கப்படும். இப்படி குஜராத்தில் ஐந்தும், மராட்டியத்தில் ஏழும் கட்டிக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன.

துறைமுகக் கட்டுமானப் பணிகளுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடு எதிர்பார்த்தது போய், சிறிய துறைமுகங்களை முழுவதுமாகவும் பெரியவற்றைப் பகுதி, பகுதியாகவும் தனியாருக்கும், அந்நிய சரக்குப் போக்குவரத்துக் கம்பெனிகளுக்குத் தாரை வார்ப்பதாகவும் முடிந்துள்ளது. பம்பாய்த் துறைமுகத்தின் ஒரு பெரும்பகுதி ''அமெரிக்க பிரசிடெண்ட் லைன்ஸ்'' நிறுவனத்துக்கும் அதே போல சென்னைத் துறைமுகத்தில் ''பெங்கால் டைகர் லைன்ஸ்'' எனப்படும் ஜெர்மனி நிறுவனத்துக்கும் முழுக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேலும் ஒரு பகுதி ஒரு இலண்டன் நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடும் யோசனையும் உள்ளது. ''பெங்கால் டைகர் லைனுக்கு விட்டது சரக்கு ஏற்றுமதி - இறக்குமதியை, சரக்குப் பெட்டகங்கள் நகருவதை வேகப்படுத்தியுள்ளது. இப்படி இரண்டு கம்பெனிகளுக்கு துறைமுகப் பகுதிகளை ஒதுக்கீடு செய்ததைத் தவிர தனியார் மயமாக்குவதில் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை'' என்கிறார், சர்வதேச சரக்கு ஏற்றுமதி - இறக்குமதி மற்றும் கப்பல் முகமையின் பங்குதாரர் கே.ஜே. ராமசாமி. இதிலிருந்து கப்பல் போக்குவரத்தை விரிவுபடுத்துவதற்கான அடிப்படைக் கட்டுமானப் பணிகளில் முன்னேற்றம் காண்பதற்கான முயற்சி தோல்வியுற்றதையும் அறியலாம்.

தொழில் முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியமான அடிப்படைக் கட்டுமானத் தேவை மின் சக்தி. ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலுமே மின்சக்தி பற்றாக்குறை பல ஆண்டுகளாக நீடிக்கிறது. நாடு முழுவதும் உள்ள பல்வேறு வகை மின் நிலையங்களின் நிறுவப்பட்ட உற்பத்தித்திறன் 88,000 மெகாவாட். அவை அனைத்தும் முழுத்திறனுடன் இயங்கினால் கூட நாட்டின் மின் தேவையில் 30 சதவீதம் பற்றாக்குறை நிலை தான்! அவசர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவில்லை என்றால் இதுவே 80 சதவீதப் பற்றாக்குறையாக விரைவில் உயரும். அதன் பிறகு மின் சக்தியே ஒரு ஆடம்பரப் பொருளாகி விடும்.

தற்போதைய 30 சதவீத மின் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கே 20,000 மெகாவாட் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவ வேண்டும். இதற்கான முதலீடு மட்டும் 65,000 கோடி ரூபாய் முதல் 1,00,000 கோடி ரூபாய் தேவை. இவ்வளவு பெரும் தொகையை உள்நாட்டிலோ வெளி நாட்டிலோ பெருவதற்கான அரசு முயற்சி எதுவும் இல்லை. உலக வங்கி மற்றும் ஐ.எம்.எஃப் ஆகிய நிதிநிறுவனங்கள் இந்திய அரசு மின் கழகங்கள் இயங்கும் திறன் குறித்து பல புகார்கள் கூறி, கடன் தரவே மறுக்கின்றன. அதே சமயம் மேலை நாட்டு தேசங் கடந்த மின் தொழில் கழகங்கள், காலாவதியான தொழில் நுட்பம், இயந்திரங்களை இறக்குமதி செய்யும்படி நிர்பந்திக்கின்றன. அதற்கும் அதீதமான விலையும், இலாப உத்திரவாதமும் பெற்றுள்ளன.

அவசர வழி மின் உற்பத்தித் திட்டங்கள் என்கிற பெயரில் வெவ்வேறு மாநிலங்களில் எட்டு ஒப்பந்தங்கள் அந்நிய






படிப்பகம்

www.padippakam.com

ஏகபோக நிறுவனங்களுடன் போடப்பட்டுள்ளன. மராட்டிய மாநிலம் தபோலில் என்ரான், ஓரிசா மாநிலம் இபி பள்ளத்தாக்கில் ஏ.ஈ.எஸ், கர்நாடகம் பத்ராவதியில் கோஜென்டிரிக்ஸ், மேற்கு வங்கத்தில் சி.எம்.எஸ். மின் சக்திக் கழகம் ஆகிய இராட்சத மின் நிலையங்களை அமெரிக்க ஏகபோகங்கள் நிறுவ உள்ளன. குஜராத் மாநிலம் பகுதானில் டோரண்ட் - சீமன்ஸ், நெய்வேலியில் சீமன்ஸ் ஆகிய ஜெர்மனி கம்பெனிகள் மின் நிலையங்களை நிறுவ உள்ளன. இவை தவிர இந்துஜா மற்றும் வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் பெயரிலான பினாமிகளுடைய கம்பெனிகள் மூலமாகவும் அந்நிய ஏகபோகங்கள் நுழைகின்றன.

இந்தத் திட்டங்கள் எல்லாம், அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன் ஆகிய ஏகாதிபத்திய ஏகபோகங்களின் கூட்டுக் கொள்ளை அடிப்படையிலானவை. அந்நிய ஏகபோகங்களின் முதலீட்டை ஈர்ப்பதுதான் புதிய பொருளாதாரக் கொள்கையின் நோக்கம் என்றாலும் அந்நோக்கத்தின் சாதகமான அம்சங்கள் என்று சொல்லப்பட்டவை ஈடேறினவா? நமது நாட்டிலேயே சர்வதேசத் தரத்துடன் அனல் மின் நிலையங்களை நிறுவி இயக்கி வரும் அரசு நிறுவனங்கள் இந்திய மிகுமின் நிறுவனம் மற்றும் தேசிய அனல் மின் கழகம் ஆகியவை. ஆனால் மேற்கண்ட மின் திட்டங்களுக்கு ஏலம் மூலம் ஒப்பந்தங்கள் போடப்படவில்லை. இரகசிய பேரங்களினால் முடிவு செய்யப்பட்டன. ஒப்பந்தங்கள் போட்ட அரசுத் தலைவர்களும் அதிகாரிகளும் ஏராளமான இலஞ்சம் பெற்றுக் கொண்டு அந்நிய ஏகபோகங்களுக்கு பல்வேறு சலுகைகளும் உத்திரவாதங்களும் அளித்துள்ளனர். இவை அனைத்தும் என்ரான் - தபோல் மின் திட்டம் குறித்த காங்கிரசு - பாரதீய ஜனதா, சிவ சேனா கூட்டணி அரசுகளிடையே நடந்த தகராறுகள், அத்திட்டத்தை ரத்து செய்து, மறு ஒப்பந்தம் போட்டதிலேயே அம்பலமானது.

காலாவதியான தொழில் நுட்பம், இயந்திரங்கள் இறக்குமதி, திட்டமதிப்பீடு - ஆய்வு என்கிற பெயரிலேயே பல கோடி கொள்ளை, திட்ட அமைப்பு, ஆலோசனை, நிர்வாகம் ஆகியவற்றுக்கும், மூலப் பொருள் இறக்குமதிக்கும் தொடர்ந்து பல கோடி இறைக்கப்படுவது, உற்பத்தியாகும் மின்சாரத்துக்கு அதீத விலை கொடுத்து வாங்கும்படி நிர்பந்தம், தொடர்ந்து 16 சதவீத இலாப உத்திரவாத ஒப்பந்தம் - இல்லையானால் அரசே ஈட்டுத் தொகை தருவது - ஆகிய பாதகமான அம்சங்களே போதும். தாராளமயமாக்கலில் பல பலன்கள் இருப்பதாக்ப் புளுகிய அனைத்தும் அடிபட்டுப் போய் விட்டன. இப்படித்தான் வேறு பிற மின் திட்டங்களும், வெள்ளையானையைக் கட்டித் தீனி போடும் தன்மையிலானவை என்பது நிருபணமாகி வருகிறது. அப்படி இருந்தும் இத் திட்டங்கள் அனைத்தும் ஆமை வேகத்திலேயே முன்னேறுகின்றன. தாராளமயமாக்கல் வந்து அதிகாரபூர்வமாக ஐந்தாண்டுகளாகின்றன. ஆனால் இன்னமும் ஆய்வு - ஆரம்பநிலையிலேயே எல்லாத் திட்டங்களும் உள்ளன.

இப்போது உலகிலேயே அதிக இலாபம் தரக் கூடியது கணினி- கம்யூட்டர்களை அடிப்படையாகக் கொண்ட தகவல் தொழில் நுட்பத்துறை. அதற்கு அடுத்தது தொலைத்தொடர்புத் துறை. இந்தியாவில் அதற்கான சந்தை பெரும் அளவில் உள்ளதால் இந்தியப் பெரும் தரகு முதலாளிகள் அந்நிய ஏகபோகங்களுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்கு போட்டி போட்டுக் கொண்டு வருகின்றனர். குறிப்பாக ஏ.டி. அன்ட் டி, அமெரிக்கன் வெஸ்ட், மோட்டோராலா போன்ற ஏகபோகங்கள். ஆனால் எங்கும் நிறைந்திருக்கும் இலஞ்ச - ஊழல் காரணமாக, இதிலும் பல ஆயிரம் கோடி ரூபாய்களுக்கு போடப்பட்ட ஒப்பந்தங்கள் முறைகேடாகவே இறுதியாக்கப்பட்டுள்ளது. இந்த வகையிலும் தாரளமயமாக்கலின் நோக்கம் நிறைவேறாமல் போய் விட்டது.

**முதலீடு செய்யும் வகையில் உள்நாட்டு சேமிப்பும் கிடையாது. வெளிநாட்டு மூலதனத்தை ஈர்ப்பதற்குப் போதுமான, குறிப்பான வழிவகையும் நம்மிடம் இல்லை என்று ஒப்புக்கொள்கிறார் திட்டக் கமிசன் உறுப்பினர் ஜி.வி.இராமகிருஷ்ணா.**

நாட்டிலுள்ள நாடாளுமன்ற - சட்டமன்ற அரசியல் கட்சிகள், அதிகார வர்க்க அமைப்பு எதுவுமே உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கைக்கு எதிராக இல்லை. ஆரம்ப காலத்தில் இவற்றை எதிர்ப்பதாக நாடகமாடிய தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணிக்கட்சிகளும் இப்போது அதைக் கைவிட்டு விட்டன. பாரதீய ஜனதா மற்றும் தன்னார்வக் குழுக்கள் இப்போது காட்டி வரும் எதிர்ப்பும் போலியானவை - நிழல்சண்டை தான். உண்மையான எதிர்ப்புக் காட்டும் புரட்சிகர அமைப்புகளும் அறிவு - ஜீவிகளும் கூட உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கலுக்கு எதிரான மக்கள் ஆதரவைத் திரட்டுவதில் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. அந்தப் போக்கை உடனடியாகவோ, சமீப காலத்திலேயோ தடுத்து நிறுத்தி விடும் பலம் பெற்றிருக்கவில்லை.

இருந்தாலும் இப்போதுள்ள நாடாளுமன்ற - சட்டமன்ற அரசியல் அமைப்பும், அதன் நிர்வாக இயந்திரமான அதிகார வர்க்க அமைப்புமே போதும். அதில் புரையோடிப் போயிருக்கும் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடு, கிரிமினல்மயமாக்கல் ஆகியவை நாட்டின் பொருளாதாரத்தை எந்தவகையிலும் முன்னேற அனுமதிக்காது; இவை ஒரு பிரச்சினையாக இல்லாவிட்டாலும் உலக வங்கி, ஐ.எம்.எஃப் மற்றும் உலக வர்த்தக நிறுவனம் ஆகிய ஏகாதிபத்திய நாட்டார் மேலாதிக்க அமைப்புக்கள் இந்தியா போன்ற நாடுகளைக் கொள்ளையடித்து அவற்றின் பொருளாதாரத்தை திவாலாக்கவே செய்யும். மற்றபடி தொழிற்தேவைக்கான அடிப்படைக் கட்டுமானப் பணிகளில் அவை முதலீடு செய்யமாட்டா; ஒன்று ஏற்கனவே உள்ளவற்றை பயன்படுத்திக் கொள்ளையிடும்; அல்லது கந்து வட்டிக்கு கடன் கொடுத்து அடிப்படைக் கட்டுமான வசதிகளை நமது நாட்டின் சொந்தப் பொறுப்பு, சொந்தச் செலவில் விரிவு படுத்திப் பயன்படுத்திக் கொள்ளும்.

தொழிற் தேவைக்கான அடிப்படைக் கட்டுமானத் துறையில் கடந்த ஐந்தாண்டுகளில் குறிப்பிடத்தகுந்த அளவு முன்னேற்றம் இல்லை என்பது மட்டுமல்ல, எதிர்காலமும் இருண்டதாகவே இருக்கிறது. 1997 - 2002 ஆகிய அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்துக்கு மின் சக்தித் துறைக்கான முதலீடு மட்டும் 1,68,000 கோடி ரூபாய்கள் தேவை. தொலைத் தொடர்புத் துறைக்கான வலைப்பின்னலை நிறுவுவதற்கு மட்டும், 1,20,000 கோடி ரூபாய் தேவை. சாலை மற்றும் இரயில்வே கட்டுமானங்களுக்கு ஆண்டுத் தேவைகள் முறையே 10,000 கோடி மற்றும் 7,000 கோடி ரூபாயாகும். கப்பற் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு மட்டும் ஆண்டுக்கு 5000 கோடி ரூபாய் தேவை. ஒட்டு மொத்தமாக தொழிற் தேவைக்கான கட்டுமானப்பணிகளுக்கு 1999 வரையிலான தேவை 2,78,000 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 14.3 சதவீதம் அதாவது 40,000 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே வழங்க முடியும் என்று இந்தியாவிலுள்ள நிதிநிறுவனங்கள் ஒப்புக் கொண்டுள்ளன.

மீதிக்கு எங்கே போவது? "அந்த அளவுக்கு முதலீடு செய்யும் வகையில் உள்நாட்டு சேமிப்பும் கிடையாது. ஆகவே வெளி நாட்டு மூலதனத்தை ஈர்ப்பதற்குப் போதுமான, குறிப்பான வழிவகையும் நம்மிடம் இல்லை" என்று ஒப்புக் கொள்கிறார் திட்டக் கமிசன் உறுப்பினர் ஜி.வி. இராமகிருஷ்ணா. இந்த இலட்சணத்தில் தாராளமயமாக்கல் கொள்கை வெற்றி பெறுவதற்கான அடிப்படையே இல்லை.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# தென் மாவட்ட தலித்துகள் மீது மேல் சாதி-போலீசு கூட்டுத் தாக்குதல்-தலைமையின் தடுமாற்றம்

நெல்லை - சிதம்பரனார் மாவட்டங்களில் சென்ற ஆண்டில் நடந்த தேவர் - தாழ்த்தப்பட்டோருக்கு இடையேயான மோதல்கள் முடிந்து போய் இரு மாதங்களுக்குள்ளாகவே மதுரை - காமராசர் மாவட்டங்களில் கலவரங்கள் உருவெடுத்து விட்டன. இம்முறை காமராசர் மாவட்டத்தைச் சேர்ந்த இராசபாளையம் நகரிலும், அதை ஒட்டியுள்ள கிராமப்புறங்களிலும்தான் இரு சாதியினருக்குமிடையே நேரடி மோதல்கள் மிகவும் தீவிரமடைந்தன. மதுரை, தேனி, அருப்புக் கோட்டை, சாத்தூர், சிவகாசி - இப்பகுதிகளில் எல்லாம் மோதல்கள் உருவெடுக்கும் வண்ணம் பதட்டச் சூழல் நிலவியது. இரு வாரங்களில் பரமக்குடியில் மூவரும், இராசபாளையத்தில் 12 பேரும் இக்கலவரத்தின்பொழுது உயிரிழந்தனர்.

மார்ச் 2-ந் தேதி நள்ளிரவில் காமராசர் மாவட்டம் - வத்திராயிருப்புக்கு அருகிலுள்ள அர்ச்சனாபுரம் கிராமத்தில், 25 பேர் கொண்ட முகமூடி அணிந்த மர்மக் கும்பலொன்று புகுந்து, தேவர் சிலை மீது குண்டு வீசி சேதப்படுத்தியது. "இக்கும்பலைச் சேர்ந்தவர்கள் யார்? எந்த சாதியினர்? இவர்களின் நோக்கமென்ன?" - என்பதற்கு இதுநாள்வரை தெளிவான விடை கிடைக்கவில்லை. ஆனால், குண்டு வெடித்துச் சிலை சேதமடைந்ததற்குத் தாழ்த்தப்பட்டோரையே குற்றஞ் சுமத்தினர், தேவர் சாதியினர். திருவில்லிபுத்தூரிலும் சென்னையிலும் இதைக் கண்டித்துப் பல்வேறு தேவர் சாதி சங்கங்கள் சாலை மறியலில் ஈடுபட்டன. விசாரணை நடத்தி உண்மையை உணர்த்த வேண்டிய ஜெயா அரசோ புதிய தேவர் சிலையை வைத்துக் கொடுத்து, தேவர் சாதியினர் மத்தியில் நல்ல பெயர் எடுப்பதில்தான் முனைப்பாக இருந்தது.

இதனிடையே, கிருஷ்ணசாமி தலைமையில் இயங்கிவரும் தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பின் முதல் மாநில மாநாடு மார்ச் 6-ந் தேதி மதுரையில் நடந்தது. மாநாடு நடைபெறும் நாளன்றே, தென் மாவட்டங்களின் பல பகுதிகளில் சாலை மறியலில் ஈடுபடப் போவதாக அறிவித்து, பேருந்துகளில் சுவரொட்டிகளை ஒட்டியிருந்தன தேவர் சாதி சங்கங்கள். அன்று இரவு மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த டி. கல்லுப்பட்டியில், 300-க்கும் அதிகமான தேவர் சாதியினர் சாலையை மறித்து, மாநாடு முடிந்து தங்கள் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்டோரைத் தாக்கினர். இதில் இராசபாளையத்துக்கு அருகிலுள்ள சுந்தரராசபுரம் கிராமத்தைச் சேர்ந்த 60 வயதான முதியவர் பிலிப், செங்கற்களால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்; அதே கிராமத்தைச் சேர்ந்த வேறு மூவரும், திருவில்லிபுத்தூர் அருகேயுள்ள கோட்டைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 20 பேரும் காயமுற்று மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை இதை விட அதிகமாகவே இருக்கக்கூடும்.

தாக்குதல் தொடுக்க தேவர் சாதியினர் ஊரினுள் திரண்டு நிற்பதை அறிந்தும், போலீசார் தாழ்த்தப்பட்டோரைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வதாகக் கூறினர். ஆனால், சுந்தரராசபுரத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் சென்ற லாரியை தேவர் சாதியினர் தாக்கத் தொடங்கியபொழுது, அந்த லாரிக்கு முன்னும் பின்னுமாக ஜீப்பில் சென்ற போலீசார் தாக்குதலைத் தடுத்து நிறுத்த முயலவேயில்லை. தாழ்த்தப்பட்டோர் மாநாட்டிற்காக டி. கல்லுப்பட்டியைக் கடந்து செல்லும் போது, "தேவர் சாதியினரையும் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவையும் இழிவுபடுத்திக் கோஷமிட்டதாகவும், அதற்குப் பாடம் புகட்டவே சேடப்பட்டி முத்தையாவும் அவரது மகனும் இத்தாக்குதலைப் பின்னிருந்து தூண்டி விட்டதாகவும்" செய்திகள் வெளிவந்துள்ளன.

டி. கல்லுப்பட்டியில் நடந்த தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக லாரியில் இருந்து இறங்கி ஓடியவர்களில் 10 பெண்கள் ஊர் திரும்பவில்லை. இதனால் தாழ்த்தப்பட்டோர் மார்ச் 7-ந் தேதி இராசபாளையத்தில் சாலை மறியலில் இறங்கினர். அப்பெண்கள் ஊர் திரும்பியதையடுத்து, சாலை மறியல் அன்றே விலக்கிக் கொள்ளப்பட்டது. மார்ச் 8-ந் தேதி தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பால்ராசு கத்தியால் குத்தப்பட்டார். மார்ச் 9-ந் தேதி சேத்தூர் கிராமத்தில் தேவர் சாதியைச் சேர்ந்த அம்மையப்பன், பரமசிவம், மாரியப்பன் - மூன்று சகோதரர்களும் தாழ்த்தப்பட்டோரால் வெட்டப்பட்டனர். இதில் அம்மையப்பனும், பரமசிவனும் அதே இடத்தில் மாண்டு போயினர்.

டி.கல்லுப்பட்டி தாக்குதலில் மாண்டுபோன பிலிப்



மங்காபரம் எனும் பகுதியில் இருந்த தாழ்த்தப்பட்டோர் குடிசைகள் போலீசாரால் அடித்து நொறுக்கப்பட்டன; தாழ்த்தப்பட்டோர் பகுதியை விட்டுத் துரத்தப்பட்டனர்; இதன்பின் அக்குடியிருப்பு தேவர் சாதியினரால் தீ வைத்துக் கொளுத்தப் பட்டது. இதற்குப் பதிலடியாக மாடசாமித் தேவர் என்பவருக்குச் சொந்தமான கைத்தறி தொழிற்சா



படிப்பகம்

www.padippakam.com

லையும், தனியார் பள்ளிக்கூடமொன்றும் தாழ்த்தப்பட்டோரால் கொளுத்தப்பட்டன. மார்ச் 10-ந் தேதி தாளவாய்புரம் கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு தாழ்த்தப்பட்டோர், வயலில் வேலை செய்து கொண்டிருந்த பொழுது கொல்லப்பட்டனர். பிள்ளை சாதியைச் சேர்ந்த செந்தட்டி என்பவரும் இக்கலவரத்தின் பொழுது இறந்து போனார்.

கலவரக்காரர்களை ஒடுக்குவது என்ற பெயரில் குவிக்கப்பட்ட போலீசு, தாழ்த்தப்பட்டோரின் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதில் முனைப்பாக இருந்தது. மங்காபரத்தில் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளைத் தேவர் சாதியினர் அடித்து நொறுக்கிய பொழுது போலீசு அச்சாதி வெறியர்களோடு கை கோர்த்துக் கொண்டது. 9-ந் தேதியன்று தாழ்த்தப்பட்டோர் நிறைந்து வாழும் துரைசாமிபுரத்தில் போலீசு நுழைந்தது. போலீசு பகுதியினுள் நுழைவதைத் தடுத்த பெண்கள் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டனர். போலீசாரிடமிருந்து அப்பெண்களைப் பாதுகாக்க ஆண்கள் மறைவிடத்தில் இருந்து வெளியே வந்த பொழுது, முன்னெச்சரிக்கைகூட செய்யாது, அவர்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர் போலீசார். காயம்பட்ட மாரியப்பனைத் துப்பாக்கி மட்டையால் தாக்கியும், தரதரவென்று தெருக்களில் இழுத்துச் சென்றும் போலீசு வேனில் தூக்கியெறிந்தனர். முதல் உதவி ஏதும் செய்யாததால் காலில் காயம்பட்ட இடத்தில் இரத்தப்போக்கு அதிகம் ஏற்பட்டு மாரியப்பன் இறந்து போனார். ஆனால் இவரது மரணம் ''குண்டு பாய்ந்ததால் நேர்ந்தது'' எனத் திரிக்கப்பட்டது.

மாடசாமித் தேவரின் கைத்தறி தொழிற்சாலை கொளுத்தப்பட்டதற்குப் பாடம் புகட்டவே திட்டமிட்டு துரைசாமி புரத்தின் மீது தாக்குதல் தொடுக்கப் பட்டது. ஆனால், துரைசாமிபுரம் கலவரத்தோடு சிறிதும் சம்பந்தப்படாத பகுதியாகும். மங்காபுரத்தை எரித்த தேவர்கள் மீது எவ்வித வழக்கும் பதிவு செய்யப்படவில்லை; எரியும் வீட்டினுள் சமுத்திரம் என்ற தாழ்த்தப்பட்டவரை வெட்டித் தூக்கியெறிந்து படுகொலை செய்த குருசாமித் தேவரும் இது நாள் வரை கைது செய்யப்படவில்லை.

இதேபொழுதில் மதுரையில் பார்வார்டு பிளாக் கட்சியும், முக்குலத்தோர் முன்னேற்ற சங்கமும் ''தாழ்த்தப்பட்டோர் ஊர்வலம் சென்ற பொழுது தேவர்

**பிரதான எதிரிகளைச் சுட்டிக்காட்டாது, புற உண்மைகளைத் திரித்துப் புரட்டி, 'தனி மாநிலம்' கோருவது, தாழ்த்தப்பட்டவர்களின் சமூக விடுதலைக்கான போராட்டத்தைத் திசை திருப்புவதாகவே அமையும்.**

சிலை மீது செருப்புகளை வீசி எறிந்தனர்'' எனக் கூறி, 7-ந் தேதி மாலையில் அதே சிலை முன்பு அமர்ந்து சாலையை மறித்தனர். அடுத்த மூன்று நாட்களும் சாலை மறியல் நகரெங்கும் பரவியது; தேவர் சிலையைத் தூய்மைப்படுவதாகக் கூறி, அச்சிலையைத் தண்ணீரால் கழுவி, பாலாபிஷேகம் செய்து சாதிவெறி தூண்டிவிடப்பட்டது. நகரெங்கும் தேவர் பறக்கும் படை என்பது போன்ற பல வண்ணப் பெயர்களில் வலம்வந்த உதிரி இளைஞர் பட்டாளம், வழிப் போக்கர்களையும், கடைகளையும், பேருந்துகளையும் தாக்கி வன்முறைக் களியாட்டத்தில் இறங்கியது. போலீசாரோ சிறு தடியடி கூட செய்யாது ஒதுங்கிக் கொண்டனர்.

மார்ச் 10-ந் தேதி காமராசர் மாவட்டத்திலும், 12-ந் தேதி மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் மாவட்டங்களிலும் தேவர் சிலை மீது செருப்பு வீசப்பட்டதையே காரணமாக வைத்து, முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்தன தேவர் சாதி சங்கங்கள். இதன் காரணமாக எழுந்த பூசலில் சாத்தூரில் சில கடைகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. அருப்புக்கோட்டையில் நாடார் சாதியினரை இழிவுபடுத்தியதோடு, நாடார்கள் மற்றும் செட்டியார் சாதியினர் கடைகளும் வீடுகளும் அடித்து நொறுக்கப்பட்டன. இதனால் இவ்விரு சாதியினரும் 13-ந் தேதி தேவர் சாதியினரைக் கண்டித்து அருப்புக்கோட்டையில் முழு அடைப்பு நடத்தினர். இராசபாளையம் கலவரம் காரணமாக தேவர் சாதியைச் சேர்ந்த 28 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். யார் கைதாக வேண்டும் என்பதை தேவர் சாதி சங்கமே தீர்மானித்துள்ளது. கைதானவர்களின் குடும்பத்துக்கு ரொக்கமாக 500-ம், நாளொன்றுக்கு 50 ரூபாயும் தேவர் சாதி சங்கத்தால் கொடுக்கப்படுகிறது.

தேவர் சாதி சங்கங்களுக்குப் போட்டியாக தேவேந்திர குல வேளாளர் சங்கமும் களத்தில் இறங்கியது. 13-ந் தேதி தேனியில் இவ் அமைப்பினர் சார்பாக நடந்த முழு அடைப்பின் போது எழுந்த பூசலில் அல்லி நகரம் பகுதியில் இருந்த தாழ்த்தப்பட்டோரின் குடிசைகள் கொளுத்தப் பட்டன. பரமக்குடியில் முழு அடைப்பின் காரணமாக தலித், தேவர், கோனார் சாதிகளைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டனர். இக்கலவரத்தையொட்டி சந்திரபோஸ் என்பவர் தலைமையில் செயல்படும் தியாகி இம்மானுவேல் பேரவையும் கிருஷ்ணசாமிக்குப் போட்டியாக இறங்கியுள்ளது. இவ்வமைப்பினர் 27-ந் தேதி காமராசர் மாவட்டத்தில் முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

சென்ற முறை போல் அல்லாது இந்த முறை கலவரத்தில் முதல் பலி (பிலிப்) விழுந்தவுடனேயே, ஜெயா அரசு தேர்தலைக் கருத்தில் கொண்டு விழித்

**சாதி வெறியூட்டப்பட்ட தேவர் சாதியினர்**




படிப்பகம்

www.padippakam.com

இராசபாளையத்திலும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலும் மேல் சாதியினரான ராஜுக்கள்தான் பொருளாதாரரீதியாக ஆதிக்க நிலையில் உள்ளனர். தேவர் சாதியினரில் பெரும்பாலோர் கூலி விவசாயிகள்; நில உடமையினை எடுத்துக் கொள்ளும் போது ஐந்து ஏக்கர் முதல் ஐம்பது ஏக்கர் வரை சொந்தமாகக் கொண்ட நடுத்தர மற்றும் பணக்கார விவசாயிகளும் இச்சாதியினருள் உண்டு. நிலக்குத்தகை எடுத்துப் பயிர் செய்வோரையும் இவர்களுள் காண முடியும். தாழ்த்தப்பட்டோரில் 75 சதவீதமானோர் கூலி விவசாயிகள். 30 செண்ட் முதல் 5 ஏக்கர் வரை நில உடமை கொண்ட சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளும், மில் தொழிலாளிகளும் தாழ்த்தப்பட்டோரிடையே குறைவு தான்.

பொருளாதார ரீதியில் ராஜுக்களுக்குப் போட்டியாக தேவர் சாதியினர் வளர்ந்து வருகின்றனர்; ராஜுக்கள் தேவர் சாதியினருக்குப் பெரும்பாலும் வேலை கொடுப்பதில்லை; தேவர் சாதியினர் தங்களுக்குள்ளாகவே நிலக்குத்தகை எடுத்துக் கொள்வது, விவசாயக் கூலி வேலை செய்வது எனச் சாதி ஒற்றுமையைப் பலப்படுத்திக் கொண்டுள்ளனர். தாழ்த்தப்பட்டோர், ராஜுக்கள் மற்றும் தேவர் சாதியினரின் நிலங்களில் கூலி வேலை செய்து வருகின்றனர்.

ராஜுக்களுக்கும் தேவர் சாதியினருக்கும் இடையில் நடக்கும் பொருளாதார ஆதிக்கப் போட்டியில், ராஜுக்கள் தாழ்த்தப்பட்டோரைப் பகடைக் காயாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக ஏற்கனவே உள்ள சாதிப் பகைமையோடு, தாழ்த்தப்பட்டோர் மீது ஒருவிதக் கசப்புணர்வும் தேவர்கள் மத்தியில் நிலவி வருகிறது. இந்நிலையில் மதுரையில் தேவர் சிலை மீது செருப்பு வீசப்பட்டதை, தேவர் சாதி ஆதிக்க சக்திகள் சாதி வெறியாகத் தூண்டி விட, அது பெருங்கலவரமாக வெடித்துக் கிளம்பியது. இதைப் பயன்படுத்திக் கொண்டு, ராஜுக்கள், தாழ்த்தப்பட்டோர் மத்தியில் ஆர்.எஸ்.எஸ்.ஐ-ப் பலப்படுத்திவிட முயன்று வருகின்றனர்

துக் கொண்டது. 50,000/- ரூபாய் நிவாரணத் தொகையைத் தூக்கிக் கொண்டு, அமைச்சர்கள் ஓடி வந்தனர். அவர்களின் பின்னேயே ஜெயாவும் கலவரப் பகுதிகளைப் பார்வையிட வந்தார். மேட்டுப்பட்டி எனும் இடத்தில் பெண்கள், ''ஜெயலலிதாவே திரும்பிப் போ! மரியாதையாக இங்கிருந்து ஓடி விடு!'' எனக் கோஷமிட்டு ஜெயாவை விரட்டியடித்துள்ளனர். கலவரப் பகுதிகளைப் பார்த்து முடித்தவுடனேயே காமராசர் மாவட்ட ஆட்சியராக இருந்த தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த கனகராகவைத் தூக்கியடித்து தேவர் சாதியினருக்கு அபயக்கரம் அளித்தார் ஜெயா. நாயுடு சாதியைச் சேர்ந்தவரும், இந்து மதவெறி அமைப்புகளுக்கு கோடி கோடியாய் வாரி வழங்குபவருமான சுப்பிரமணிய ராஜு தலைமையில் 'அமைதிக் கமிட்டி'யும் ஜெயா அரசால் உடனடியாக அமைக்கப் பட்டது.

தென் மாவட்டங்களில் வாழும் தாழ்த்தப்பட்டோரிடையே ஜான் பாண்டியனின் செல்வாக்கு சரிந்த பின்பு, அந்த இடத்தைக் கைப்பற்றிக் கொள்ள கிருஷ்ணசாமிதான் மும்முரமாக முயன்று வருகிறார். இவர் தலைமையில் இயங்கும் தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு, ''ஜெயாவைப் பதவியில் இருந்து இறக்க வேண்டும்'' என்பதில் மிகத் தீவிரமாக உள்ளது. ஆனால் இதற்கு மாற்றாக எதிர் வரும் தேர்தலை எப்படி எதிர் கொள்வது என்பது பற்றிய மாற்றுத் திட்டம் இவர்களிடம் இல்லை. இது ஜெயா மீது இருக்கும் வெறுப்பை எதிர்க்கட்சிகள் அறுவடை செய்து கொள்ளத்தான் வாய்ப்பினை ஏற்படுத்தும்.

''சாதி ஆதிக்க சக்திகளைத் தண்டிப்பதை நாமே நமது கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டும்'' எனக் கூறியுள்ளார் கிருஷ்ணசாமி. இது சரியானது தான். அதே பொழுதில் தாழ்த்தப்பட்டோர் மத்தியில் சரியான அரசியல் புரிதலையும், சமூக - பொருளாதாரக் கண்ணோட்டத்தையும் சாதி சங்கங்கள் ஏற்படுத்துவதில்லை. இதன் காரணமாகப் போராடும் தாழ்த்தப்பட்டோரிடம் அமைப்புரீதியில் அல்லாத அராஜக கும்பல் வன்முறைக் கலாச்சாரமும், குறுகிய சாதிய உணர்வும் வேரூன்றத் தொடங்கி, போராட்டத்தைச் சீரழித்துவிடும் அபாயமுள்ளது.

கிருஷ்ணசாமி, தன்னார்வக் குழுக்களிடம் தொடர்புடைய டி.எஸ்.எஸ். மணி போன்றோரோடு கை கோர்த்துக் கொண்டுள்ளார்; தியாகி இம்மானுவேல் பேரவை, ''ஐடியாஸ்'' என்ற தன்னார்வக் குழுவிடம் இறுக்கமான பிணைப்பைக் கொண்டுள்ளது. திருமாவளவனின் தலித் சிறுத்தைகள் அமைப்பும் தன்னார்வக் குழுக்களிடம் தொடர்பு கொண்டுள்ளது. தன்னார்வக் குழுக்கள் மக்களின் போராட்டத்தைத் திசை திருப்பி, சீரழிப்பதற்காகவே ஏகாதிபத்தியங்களால் உருவாக்கப்பட்டவை.

சமீபத்தில் நடந்த மதுரை மாநாட்டில், ''தனியாக தேவேந்திர குல வேளாளர் மாநிலம் அமைக்கப் போராடப் போவதாக'' அறிவித்துள்ளார், கிருஷ்ணசாமி. பீகாரில் ஜார்கண்ட் சுயாட்சிப் பிரதேசம் அமைந்திருப்பதை இதற்கு உதாரணமாகச் சுட்டிக் காட்டியுள்ளார், அவர்.

பீகாரில் வாழும் ஜார்கண்ட் இன மக்கள் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள்; சாதிய சமூக அமைப்பிற்கு உட்படாத இனம் இது. இந்த இனத்தினர் வரலாற்று ரீதியாகப் பல நூற்றாண்டுகளாக ஒரே பகுதியில் குவிந்து வாழ்ந்து வருகின்றனர். இந்த இனத்தவர் அல்லாத பிறர், அப்பகுதியில் சமீபகாலங்களில் குடியேறியவர்கள்தான். உச்சரிப்பு முறைகளில் வேறுபாடு இருப்பினும், இந்த இன மக்கள் அனைவருக்கும் ஜார்கண்டி மொழிதான் தாய்மொழியாகும்; கலாச்சார - பண்பாட்டு வேறுபாடுகளும் இவர்களிடம் கிடையாது. மேலும், இந்த இன மக்கள் சிறுபான்மை தேசிய இனமாகப் பரிணமிக்கக் கூடிய சமூக - பொருளாதார வளர்ச்சி நிலையில் உள்ளனர்.

ஜார்கண்ட் இன மக்களிடம் காணப்படும் இந்த அம்சங்கள் எதனையும் தாழ்த்தப்பட்டோரிடம் காண முடியாது. மேலும் ''தேவேந்திர குல வேளாளர்களுக்காகத் தனி மாநிலம்'' எனக் கூறுவது தாழ்த்தப்பட்டோரை பள்ளர்கள், பறையர்கள், சக்கிலியர், ' மாதாரிகள் எனச் சனாதனிகள் போல் கூறு போடுவதற்கு ஒப்பாகும்; இது ஆளும் வர்க்கத்திற்குச் சேவை செய்வதாகத் தான் அமையும்.

தேவர் சாதி உள்ளிட்ட ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த அனைவருமே தாழ்த்தப்பட்டோரின் எதிரிகள் அல்லர்; ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள், கந்து வட்டி லேவா தேவிக்காரர்கள், பணக்கார விவசாயிகள், பெரு வணிகர்கள், கள்ளச் சாராயப் பேர்வழிகள் போன்று சமூக விரோதிகளாகச் சீரழிந்து போனவர்கள், ஓட்டுக் கட்சி அரசியலில் நுழைந்து திடீர்ப் பணக்காரக் கும்பலாக வலம் வருபவர்கள் - இவர்கள்தான் தங்களின் சுரண்டலுக்காகவும், ஆதிக்கத்திற்காகவும் சாதி வெறியைத் தூண்டி விடுபவர்கள். ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த பெரும்பான்மையான உழைக்கும் மக்களிடமிருந்து இந்தப் பிரதான எதிரிகளைத் தனிமைப்படுத்தி அழிப்பதுதான் தாழ்த்தப்பட்டவர்களின் போராட்ட வழியாக இருக்க முடியும். இந்தப் பிரதான எதிரிகளைச் சுட்டிக் காட்டாது, புற உண்மைகளைத் திரித்துப் புரட்டி, 'தனி மாநிலம்' கோருவது, தாழ்த்தப்பட்டவர்களின் 'சமூக விடுதலைக்கான போராட்டத்தைத் திசை திருப்புவதாகவே அமையும்.

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

## எச்சரிக்கை:

# கில்லாடி இந்திரகுமாரி

### வேட்டி - சேலை திருடியவள் கோவணத்தைப் பறிக்க வருகிறாள்

"நிலக்கரி இறக்குமதி பேர ஊழல், டான்சி நில ஊழல், தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி முறைகேடுகள்" என அனுமார் வால்போல் நீண்டுகொண்டே செல்லும் ஜெயா கும்பலின் ஊழல் பட்டியலில், புதிய வரவு இலவச வேட்டி - சேலை ஊழல்.

ஒவ்வொரு வருடமும் பொங்கல் பண்டிகை சமயத்தில் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வேட்டி - சேலை வழங்கவும், ஏழை மாணவர்களுக்கு இலவசச் சீருடைகள் வழங்கவும் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, சமூக நலத்துறையின் பொறுப்பில் இத்திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது, தமிழக அரசு. 96-ஆம் ஆண்டில் 74 இலட்சம் சேலைகள், 70 இலட்சம் வேட்டிகள் வழங்குவதற்காக 80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

இத்திட்டத்திற்காக நூல் வாங்குவது, வேட்டி - சேலைகளாக நெய்வது, சீருடைகள் தைப்பது, பின் அவற்றை அரசிடம் கொடுப்பது போன்ற பணிகளைத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் உள்ளிட்ட பல அரசு நிறுவனங்கள் செய்து வருகின்றன. இதில் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தில் மட்டும் நூல் வாங்கியது, அதனை நெய்தது, அரசிடம் வேட்டி - சேலைகள் - சீருடைகள் வழங்கியது இவை அனைத்திலும் போலி ரசீதுகள், ஆவணங்களைத் தயாரித்து, 34 கோடி ரூபாயைச் சுருட்டிக் கொண்டு விட்டது ஜெயா கும்பல்.

உதாரணமாக, திருமலை டிரேடர்ஸ் எனும் நிறுவனம் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு நூல் விற்றிருப்பதாக ரசீது தயாரிக்கப்பட்டு, பணம் காசோலை மூலமாக வழங்கப்பட்டுள்ளது. ஆனால், வருமான வரித்துறையினர் திருமலை டிரேடர்ஸின் மதுரை முகவரிக்குச் சோதனையிடச் சென்ற பொழுது, அந்நிறுவனம் இயங்கியதற்கான எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. இது போன்று 23 போலி நிறுவனங்களை உருவாக்கி, கடந்த நான்கு வருடங்களாக இம்மோசடி நடைபெற்று வந்துள்ளது.

இப்போலிகள் ஒருபுறமிருக்க, உண்மையிலேயே இயங்கிவரும் சில தனியார் வர்த்தக நிறுவனங்களின் பெயரும் அவற்றின் உரிமங்களும் இப்பகற்கொள்ளைக்குக் கேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் வரவு - செலவு கணக்கில், கவுந்தம்பாடியைச் சேர்ந்த ஸ்ரீ கருணாம்பிகா எண்டர்பிரைசஸ் எனும் நிறுவனத்திடமிருந்து நூல் வாங்கியதற்காக 96.85 இலட்சம் ரூபாய் காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளதாகக் கணக்கு எழுதப்பட்டுள்ளது. மத்திய கலால் வரித்துறையினர் இது தொடர்பாக விசாரித்த பொழுது, ஸ்ரீ கருணாம்பிகா எண்டர்பிரைசஸ் கருப்பட்டி வியாபாரமும் வட்டிக்கடை நடத்தி வருவதையும் கண்டறிந்தனர்.

1993-ம் ஆண்டு மதுசூதனன் சமூக நலத்துறை அமைச்சராக இருந்த பொழுது, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் வேட்டி - சேலைகள் வாங்கியதற்காக 14 நிறுவனங்களுக்கு 18 கோடி ரூபாய் பட்டுவாடா செய்துள்ளது. இந்நிறுவனங்கள் அனைத்தும் போலியானவை. இந்திர குமாரி இத்துறைக்கு அமைச்சரான பின், 1995-ல் இத்திட்டத்திற்காகத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் மூன்று நிறுவனங்களிடமிருந்து 2.07 கோடி ரூபாய்க்கு நூல் வாங்கியிருப்பதாகவும் வேறு மூன்று நிறுவனங்களிடம் இந்நூலைக் கொடுத்து வேட்டி - சேலைகளாக நெய்திருப்பதாகவும் கணக்கு எழுதியுள்ளது. இந்த ஆறும் பெயர்ப் பலகை நிறுவனங்கள்தாம் என்பதும் தற்பொழுது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

1994-95-ம் ஆண்டிற்கான இலவசச் சீருடைத் திட்டத்திற்காகத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், ஒரே நிறுவனத்திடமிருந்து 7.87 கோடி ரூபாய்க்கு வெள்ளைத் துணிகளை வாங்கியதாகக் கூறப்படுகிறது. "தொடங்கப்பட்ட ஒரு மாதத்திற்குள்ளாகவே அத்தனியார் நிறுவனம் இவ்வளவு பெரிய தொகைக்கு வியாபாரம் நடத்தியிருக்க முடியுமா என்பது சந்தேகத்திற்குரியது" என்கின்றனர் வருமான வரித்துறை அதிகாரிகள். 1995-96-ம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ஆறு நிறுவனங்களிடமிருந்து நூல் வாங்கியதற்காக 7.11 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் மூன்று நிறுவனங்கள் போலியானவை; பிற மூன்று நிறுவனங்களுக்காக, சிறு கருப்பட்டி வியாபார நிறுவனங்களின் பெயர்களும், பதிவெண்களும் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இப்போலி நிறுவனங்கள் பெயரில் பஞ்சாலைக் கழகத்திற்குத் தரப்பட்டுள்ள பில்கள், பணம் பெற்றுக் கொண்டதற்கான ரசீதுகள், விலை விவரப் பட்டியல்கள் அனைத்தும் அச்சிடப்படாது, வெற்றுக் காகிதத்தில்தான் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் அவை அனைத்தும் ஒரே நபரைக் கொண்டு ஒரே தட்டச்சுப் பொறியில் தயாரிக்கப்பட்டிருப்பதால், ஒரே

### இந்திர குமாரியின் கடந்த காலம்



"தனது தந்தையார் காங்கிரஸ் தியாகி" எனக் கூறிக் கொண்டு அரசியலில் நுழைந்த இந்திர குமாரி அ.தி.மு.க.வின் மூன்றாந்தர மேடைப் பேச்சாளராக வலம் வந்தார். எம்.ஜி.ஆர். ஆட்சியில் பூம்புகார் கைவினைப் பொருட்கள் துறைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்; இத்துறையில் அடுத்தடுத்து ஊழல் புகார்கள் எழவே, இந்திர குமாரியின் பதவி பறி போனது. "வேலைக்காக அரபு நாடுகளுக்கு அனுப்புவதிலும்", "சிமெண்ட் விற்பனை உரிமம் வழங்குவதிலும்" இந்திர குமாரியின் ஊழல் - மோசடிகள் நாறிப் போயின. சென்னை - சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் விபச்சார - கிரிமினல் வழக்குகளும் இவர் மேல் பதிவாயின. இதனால், எம்.ஜி.ஆரால் அ.தி.மு.க.விலிருந்தே இந்திர குமாரி வெளியேற்றப்பட்டார். இதன்பின், குமரி அனந்தனின் காந்தி - காமராஜ் தேசிய காங்கிரசில் ஒட்டிக் கொண்டார்; எம்.ஜி.ஆர். இறந்த பிறகு கிரிமினல்களின் கூடாரமான ஜெயா கும்பலிடம் தஞ்சமடைந்து மந்திரியானார். தனக்குப் பின்னே ஒரு ரவுடிக் கும்பலை வைத்துக் கொண்டு பவனி வரும் இந்திர குமாரி, பொறுக்கி - கிரிமினல் அரசியலின் ஆதிக்கத்திற்கு மிகச் சிறப்பான எடுத்துக் காட்டு.


படிப்பகம்

www.padippakam.com

மாதிரியான பிழைகளைக் கொண்டுள்ளன. மேலும் இவற்றில் பல நிறுவனங்களுக்கு ''சீலோ'', அச்சிடப்பட்ட ''லெட்டர் பேடோ'' கூட கிடையாது. இத்தில்லு முல்லுகள் அனைத்திற்கும் கோவை ஜெகன்னாதபுரத்திலுள்ள ஒரு வீடுதான் தலைமையிடமாக இருந்து வந்துள்ளது. இவ்வீட்டில் இருந்து மாவட்ட சமூக நலத் துறை அலுவலகங்களின் கள்ள முத்திரைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

'தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்' ''கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்து தான் நூல் வாங்க வேண்டும்; கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிடம் தான் வேட்டி - சேலைகள் நெய்து பெற வேண்டும்'' என்ற விதிமுறைகள் இம்மோசடிக்கு வசதியாக மீறப்பட்டுள்ளன. ''இவற்றை மட்டுமே நம்பினால் குறித்த நேரத்தில் வேட்டி - சேலைகளை வழங்க முடியாது'' என நொண்டிச் சாக்கு கூறப்பட்டு, இம்மீறலுக்கு அரசின் ஒப்புதலும் பெறப்பட்டது. ''அரசு வங்கிகளில் மட்டும்தான் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும்'' என்பதையும் மீறி, பஞ்சாலைக் கழகம் தனியார் வங்கியான மதுரை வங்கியில் கணக்கொன்றைத் துவங்கியது.

தமிழ்நாடெங்கும் சுமார் ஐயாயிரம் நெசவாளர் சங்கங்கள் இருந்த போதிலும், கோயம்புத்தூரைச் சேர்ந்த ஏழு சங்கங்களுக்கு மட்டும்தான் வேட்டி - சேலை நெய்யும் ஆர்டர்கள் பஞ்சாலைக் கழகத்தால் வழங்கப்பட்டன. இதற்குக் காரணம், இந்திர குமாரி இந்த ஏழு சங்கங்களின் நிர்வாகக் குழுவிலும் தனது கைத்தடிகளை உறுப்பினர்களாக நுழைத்திருந்ததுதான். இக்கைத்தடிகளின் மூலமாக 8.12 கோடி ரூபாயைச் சுருட்டிக் கொண்டார், அவர்.

இதற்கு வசதியாக சங்கங்கள் பெயரில் அல்லாது, இவர்கள் பெயரில் மதுரை



தஞ்சையில் இலவச சேலை நெரிசலில் சிக்கி மாண்டு போன தவமேசி

வங்கியில் கணக்குகள் துவக்கப்பட்டு, காசோலைகளும் வழங்கப்பட்டன. மேலும் போலி நிறுவனங்களுக்கும் இதே வங்கிக் கிளையில் கணக்குகள் துவக்கப்பட்டு, பஞ்சாலைக் கழகம் வழங்கும் காசோலைகள் உடனுக்குடன் பணமாக மாற்றப்பட்டுள்ளன. இவை அனைத்துமே இக்கும்பல் பொதுச் சொத்தைக் கொள்ளையிடுகிறோம் என்ற அச்சமின்றியும், பிடிபட்டால்கூடத் தம்மை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது என்ற மமதையோடுமே இம்மோசடியில் ஈடுபட்டுள்ளன என்பதைக் காட்டுகின்றன.

சமூக நலத்துறையின் முன்னாள் அமைச்சர் மதுசூதனன், பஞ்சாலைக் கழகத்தின் முன்னாள் தலைவர் கே.பி. இராசு, எம்.எல்.ஏ., அதன் முன்னாள் நிர்வாக இயக்குநர் நரசிம்மலு - இம்மூவரும் கூட்டாக இணைந்துதான் இம்மோசடியை 93-ஆம் ஆண்டு துவக்கி வைத்தனர் தற்பொழுது இந்திர குமாரியும் அவரது 'அரசியல் உதவியாளரான' வெங்கட கிருஷ்ணனும்தான் இதன் நாயகர்கள். அ.தி.மு.க. கோயம்புத்தூர் மாவட்ட கிராமப்புறச் செயலரும், பஞ்சாலைக் கழகத்தின் தலைவருமான பொள்ளாச்சி ஜெயராமன், வெங்கட கிருஷ்ணனின் வியாபாரக் கூட்டாளி தாமோதரன், பூந்தமல்லி முருகேசன் - இம்மூவரும் உற்ற கூட்டாளிகள்.

தேர்தல் நேரத்தில் இந்த ஊழல் அம்பலமாகியிருப்பதில் எதிர்க்கட்சிகளுக்கு மட்டில்லா மகிழ்ச்சி. ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்தோடு, ''சி.பி.ஐ விசாரணை வேண்டும்'' என ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டார்கள், அவர்கள். ஆனால் அ.தி.மு.க. கும்பலோ சட்டசபையில் ஊளையிட்டும், சட்ட விதிகளைக் காட்டியும் எதிர்க்கட்சிகள் இந்த ஊழல் பற்றி பேசுவதற்குக் கூட அனுமதிக்கவில்லை. நிலக்கரி பேர ஊழல் போன இடம் தெரியவில்லை. டான்சி நில ஊழலை நீதிமன்றமே குளிர்பதனப் பெட்டிக்குள் வைத்து மூடிவிட்டது. இந்த தைரியத்தில் ஜெயா, ''தனக்கு இந்த ஊழல் பற்றி எதுவுமே தெரியாது'' என்பது போல் நடந்து வருகிறார்.

மறுபுறம் அ.தி.மு.க. கும்பல் இது நாள்வரை தான் பதுக்கி வைத்திருந்த வேட்டி - சேலைகளை வெளியே எடுத்து, தற்பொழுது கட்சி அலுவலகங்களிலும் அரசு அலுவலகங்களிலும் மக்களைக் கூட்டி வந்து விநியோகிக்கத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் தன்னை உத்தமனாகவும் வள்ளலாகவும் காட்டிக் கொள்வதோடு, தேர்தல் நேரத்தில் ஓட்டுப் பொறுக்கும் பிரச்சார உத்தியாகவும் இந்த நரித்தனத்தில் இறங்கியுள்ளது.

ஆளுங்கட்சியின் இந்தக் கரிசனமும், எதிர்க்கட்சிகளின் ஒப்பாரியும் நமது காதுகளில் பூ சுற்றுவதற்குத் தானேயன்றி வேறு எதற்கும் அல்ல. எதிர் வரும் தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சியதிகாரத்தை இழந்துவிட்டால் கூட, ஜெயா உள்ளிட்ட அக்கட்சியின் ஊழல் பெருச்சாளிகளைத் தண்டித்துவிட முடியாது. அதற்கான துணிவும், தகுதியும், நேர்மையும் எந்தவொரு எதிர்க்கட்சிக்கும் கிடையாது. இந்தத் திடீர்ப் பணக்கார சமூக விரோதக் கும்பலை நடுத்தெருவில் நிற்க வைத்து அவமானப்படுத்துவது, அவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்வது, அவர்களது குடும்பங்களைச் சமூகப் புறக்கணிப்பு செய்வது என்று தண்டிக்கும் அதிகாரத்தை நாமே நமது கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டும். ● ரஹீம்

## வக்கீல் குமாஸ்தா கோடீஸ்வரனான கதை

ஐந்து வருடங்களுக்கு முன்பு வரை சாதாரண வக்கீல் குமாஸ்தாவாகக் குப்பை கொட்டிக் கொண்டிருந்த இந்திரா குமாரியின் 'அரசியல் உதவியாளரான' வெங்கிட கிருஷ்ணனின் வளர்ச்சி யாரையும் அசர வைத்துவிடும். இம்மோசடியைத் தொடர்ந்து வருமான வரித்துறையினர் சென்னையில் அசோக் நகர் பகுதியிலுள்ள அவனது வீட்டைச் சோதனையிட்ட பொழுது, ''இரண்டு லட்ச ரூபாய் ரொக்கம்; இரண்டு கிலோ நிறையுள்ள தங்க நகைகள்; நாற்பதாயிரம் ரூபாய் மதிப்பு கொண்ட அந்நியப் பணம்'' ஆகியவற்றைக் கைப்பற்றினர். சென்னையில் மேற்கு மாம்பலத்திலுள்ள அவனது தம்பி சீனிவாசன் வீட்டில் இருந்து, ''1.7 கோடி ரூபாய் பெறுமான சொத்துப் பத்திரங்கள், 3.4 கிலோ நிறையுள்ள தங்க நகைகளும்'', அவனது கைத்தடியான பூந்தமல்லி முருகேசனிடமிருந்து, ''வெங்கட கிருஷ்ணன் குடும்பத்தாருக்குச் சொந்தமான இரண்டு கோடி மதிப்புள்ள சொத்துப் பத்திரங்களும்'' கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை தவிர சென்னையில் மேற்கு மாம்பலத்தில் மூன்று மாடிக் கட்டிடமொன்றும், அதில் இயங்கி வரும் பைனான்ஸ் கம்பெனியும், பாண்டிச்சேரியில் ஐம்பது ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உருக்காலையும், கோயம்புத்தூர் பகுதியில் காற்றாடி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஆலையும், தென் ஆற்காடு மாவட்டத்தில் பல நூறு ஏக்கர் நிலபுலன்களும் வெங்கட கிருஷ்ணனுக்குச் சொந்தம்.



படிப்பகம்

www.padippakam.com

## பதுக்கல் கிட்டங்கி முற்றுகையிடப்பட்டது!

பிப்ரவரி மாதம் 26-ந் தேதி நள்ளிரவில் மதுரை - செல்லூரிலுள்ள அகிம்சாபுரம் பகுதியிலுள்ள சமூக நலத்துறை அதிகாரியான அருணாசலம் என்பவரின் வீட்டில் இருந்து இலவசப் பள்ளிச் சீருடைகளை இரகசியமாகக் கடத்திச் சென்றது ஒரு கும்பல். இதற்காக, அப்பகுதியைச் சேர்ந்த தி.மு.க., ம.தி.மு.க., வாழப்பாடி காங்கிரஸ் கட்சிகளின் மூன்று பிரமுகர்களுக்கு இலஞ்சம் கொடுத்தது அக்கடத்தல் கும்பல். இவ்விவகாரம் மெல்ல மெல்ல பகுதியெங்கும் பரவத் தொடங்க, ஆத்திரங்கொண்ட பொது மக்கள் அவ்வீட்டை முற்றுகையிட்டனர்.

பூட்டை உடைத்து உள்ளே இருக்கும் சீருடைகளைப் பொது மக்களுக்குக் கொடுத்து விடவும் தயாராயினர், அவர்கள். இதனிடையே பகுதிக்கு வந்த தமிழக அரசு அதிகாரிகள், மாலை வரை விசாரணை நடத்திவிட்டு, முடிவு ஏதும் கூறாமலேயே திரும்பச் சென்று விட்டனர். அடுத்து வந்த வருமான வரித்துறையினர் அவ்வீட்டைப் பூட்டி "சீல்" வைத்தனர். பொது மக்களும் தங்கள் பங்குக்கு மேலும் ஒரு பூட்டைக் கொண்டு பூட்டிவிட்டு, இரவு பகலாகக் காவல் புரியத் தொடங்கினர். சரக்கை வெளியே எடுத்துச் சென்றுவிடும் நோக்கத்தில் பகுதி எதிர்க்கட்சி பிரமுகர்களுக்கு வலை வீசியது பதுக்கல் கும்பல். ஆனால் பொது மக்கள் விழிப்புடன் இருந்ததால், அம்முயற்சி தோல்வியடைந்தது.

இதையடுத்து, பொது மக்களின் அனுமதியோடு அவ்வீட்டை வருமான வரித்துறையினர் சோதனையிட்டதில், 1992-93 முத்திரையிடப்பட்ட பள்ளிச் சீருடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது அம்பலமானது. மேலும், மார்ச் 13-ந் தேதியன்று இதே பகுதியில் 60 அடி சாலையிலுள்ள ஒரு கிட்டங்கியில் இருந்து 75 இலவச சேலை பண்டல்களைக் கடத்திச் செல்ல முயன்ற லாரியொன்றினையும் வழி மறித்துத் தடுத்து விட்டனர் அப்பகுதி மக்கள்.

தங்களது பதுக்கல் - கடத்தல் விவகாரம் அம்பலமாகிப் போனதால், தற்பொழுது அ.தி.மு.க. கும்பல் போலீசின் துணையோடு "கொலை முயற்சி" உள்ளிட்ட பல பொய் வழக்குகளை செல்லூர் பகுதியைச் சேர்ந்த 14 பேரின் மீது தொடுத்துள்ளது. இதனால் எதிர்க்கட்சிகள் அச்சமுற்று, போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லாது பின்வாங்கத் தொடங்கிவிட்டன. இதனைச் சாதகமாக்கிக் கொண்டு, அப்பகுதியில் பதுக்கி வைத்திருந்த இலவச பள்ளிச் சீருடைகள் - வேட்டி - சேலைகளை அதிகார வர்க்கத்தின் துணையோடு வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லத் துவங்கிவிட்டது அ.தி.மு.க. அரசு.

சேலைக் கடத்தலைத் தடுக்கும் செல்லூர் பகுதி மக்கள்



### ...தலையங்கம் தொடர்ச்சி


ஆனால் எல்லாவித சந்தர்ப்பவாதக் கூட்டுகளையும் மீறி ஒரு இலட்சியக் கூட்டு ஏற்பட்டிருக்கிறது என்றால் அது, ஜெயலலிதா - நரசிம்மராவ் கூட்டணிதான். இப்படி ஒரு கூட்டு ஏற்படாமல் போயிருந்தால்தான் வியப்படைய வேண்டும்! பார்ப்பன - பாசிச ஜெயாவின் அடிப்படை கொள்கை, திட்டம், இலட்சியம் எதிலுமே காங்கிரசு மாறுபட்டதல்ல. நரசிம்ம ராவ்-ஜெயலலிதா-அத்வானி ஆகியோர் பார்ப்பன பாசிச மும்மூர்த்திகள்; காங்கிரசுக்கும் அதிமுகவுக்கும் இடையிலான உறவு ஊடலும் கூடலும் சேர்ந்த இலட்சிய உறவுதான்; ஒருபுறம் மாநிலக் காங்கிரசாரை ஜெயா திமிரோடு தாக்கியதும், பாரதீய ஜனதாவோடு கூடிக் குலாவியதும், மறுபுறம் சி.பி.ஐ.-அமலாக்கப்பிரிவை வைத்து மத்திய அரசு ஜெயா - சசி கும்பலை மிரட்டியதும் கூட்டுக் கொள்ளையில் கூடுதல் பங்கு பெறுவதற்காகப் போட்ட பங்காளிச் சண்டைதான். தமிழ்நாட்டுப் பத்திரிகைகளும், கையாலாகாத எதிர்க் கட்சிகளும்தான் இதை நிஜச் சண்டையென நம்பின.

ஜெயாவின் திமிரான - ரௌடித்தனமான தாக்குதலுக்கும், நரசிம்மராவின் சதித்தனம் - துரோகத்தனத்துக்கும் பலியான தமிழ்நாட்டுக் காங்கிரசுக்காரர்கள் நேர்மையான அரசியல் போராளிகளாகவும் தியாகிகளாகவும் காட்டிக்கொள்கிறார்கள். இதுவரை கண்டிராத அளவில் மத்திய தலைமைக்கெதிராக ஆத்திரத்துடன் வெடிக்கின்றனர். ராவ் - ஜெயா கூட்டு உறுதியான உடனே "ராவ் கட்-அவுட்"க்கு செருப்படி, செருப்பு மாலை, கொடும்பாவி எரிப்பு, காங்கிரசுக் கொடி இறக்கி கருப்புக்கொடி ஏற்றம் போன்ற பல "அவமரியாதை"களையும் செய்து தமது "சுயமரியாதை" உணர்வை வெளிப்படுத்தினார்கள். ஆனால், இதே மூப்பனாரும், ஜெயா உதிர்த்த ரோமங்களான ஆர்.எம்.வீரப்பனும் பிறரும்தான் சினிமாக்காரன் ரஜினிகாந்தை அரசியலில் புகுத்தி ஆதாயம் தேடவும், தமிழ்நாட்டு அரசியலை மேலும் கழிசடைப் பாதையில் தள்ளவும் வெட்கமின்றி முயன்றனர். தமிழ்நாட்டை இன்னொரு விபத்திலிருந்து தப்பியது. சந்தேகமின்றி ஜெயா - சசி கும்பல்தான் இதுவரை தமிழகம் கண்டிராத சமூக விரோத கிரிமினல் கும்பல். பகிரங்கமான தாக்குதல் அல்லாமல் ஓட்டுச் சீட்டு மூலம் மட்டும் அதை அகற்ற முயலுவது மீண்டும் இப்படி ஒரு கும்பல் ஆட்சி ஏற்படுவதற்கே வழிவகுக்கும்.

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Madras-600 083.
Printed by Him at EZHIL PRINTS, 110, II Floor, 63 Arcot Rd., Madras - 600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com





# இதுதான் இன்றைய இந்தியா

தமிழக அறநிலையத் துறைக்குச் சொந்தமான இந்தக் குளுகுளு சொகுசுப் பேருந்தினை, ஜெயா ரிப்பன் வெட்டி இயக்கி வைப்பதுதான் இந்தப் படம். நாற்பது லட்ச ரூபாய் செலவில் இது போல் இரண்டு பேருந்துகள் கட்டப்பட்டு, மதுரையிலும் தஞ்சையிலும் இயக்கப்படுகின்றன. இவ்விரண்டு நகரங்களுக்கும் அருகிலுள்ள இந்து மதக் கோயில்களுக்கு உல்லாசப் பயணிகளை அழைத்துச் செல்வதற்காகவே இந்த இரு பேருந்துகளும் கட்டப்பட்டுள்ளன. உல்லாசப் பயணிகளுக்கு வசதி செய்து கொடுத்தது போலவும் இருக்கும்; பார்ப்பனியத்திற்கு சேவை செய்தது போலவும் இருக்கும் - ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! வேத ஆகமக் கல்லூரி, திருக்கோயில் நிர்வாக வாரியம், திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி, ஒரு கால பூஜைத் திட்டம், திருத்தலங்களுக்கு நேரடி ரயில் வசதி எனப் பார்ப்பனப் பண்பாட்டைத் தூக்கி நிறுத்த, ஐந்தாண்டு கால ஆட்சியில் பல கோடிக்கணக்கான ரூபாய்களை அள்ளி வீசியது, "அம்மாவின்" ஜெயா ஆட்சி.

திடீரென மழை பெய்து, ஊருக்குள் வெள்ளம் புகுந்து விட்டதால் நேர்ந்த அவலமில்லை இது. செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள தரப்பாக்கம் கிராமத்திற்கும் அனகாபுத்தூருக்கும் இடையே ஓடும் அடையாறு ஆற்றைக் கடக்கப் பாலமில்லாததால், ஆண்டாண்டு காலமாக அக்கிராம மக்கள் அனுபவித்து வரும் வேதனையிது. முழங்கால் அளவுக்குத் தண்ணீர் ஓடினாலும், மூழ்கக் கூடிய அளவிற்கு ஆற்று நீர் வெள்ளமாகப் பாய்ந்தாலும் தரப்பாக்கம் மக்களுக்கு இந்த ஆற்றைக் கடந்தால் தான் வெளியுலகத் தொடர்பே. தஞ்சையில் உலகத் தமிழ் மாநாட்டிற்காக பிதனைப் பாலம் கட்டி விளம்பரம் தேடிக் கொண்ட ஜெயா அரசுக்கு, இக்கிராம மக்களின் உயிராதாரமான இந்தக் கோரிக்கை கண்ணில் படவில்லை. வசதியுள்ளவர்கள் வீட்டைக் காலி செய்து விட்டு, வேறு இடம் தேடிக் கொண்டார்கள். "என்றாவது ஒரு நாள் விடியாதா?" என்ற ஏக்கத்துடன் ஈராயிரம் பேர் தரப்பாக்கத்தில் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பணத் திமிரெடுத்தக் கூட்டம் உல்லாசமாக ஊர் சுற்றித் திரியவும், பார்ப்பன பூசாரி கும்பல் ஊரை ஏய்த்து வயிறை நிரப்பவும் மக்களின் வரிப் பணத்தைப் பாழடிக்கும் ஆளும் கும்பல், உழைக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கோ, "கஜானா காலி" என ஓலமிடுகிறது. இந்த நயவஞ்சகக் கூட்டத்தின் கொட்டத்தை நாம் ஒடுக்கப் போவது எப்போது?

இதுதான் இன்றைய இந்தியா

